இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP


# புதிய கண்ணோட்டம்


வெளியீடு: 45 | 01 தை 1999 | விலை: ரூபா 7.00




இரணதீவு மர்மம் பக்கம் 5



பக்கம் 6 இலங்கைப் பிரச்சினையில் தென்னாபிரிக்கா



பக்கம் 7 செம்மணி புதைகுழி

# அரசியல் தீர்வுக்காக மீண்டும் பேச்சுக்கள்?

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் ஒரு பேச்சுவார்த்தைகள் இடம் பெறலாமென்ற எதிர்பார்ப்பு பலதரப்பிலும் ஏற்பட்டுள்ளது.

மாவீரர் தின உரையில் சமாதானக்கதவு அடைக் கப்பட்டுவிடவில்லை என்ற கூற்று இடம் பெற்றிருந்ததும், புரொன்ட்லைன் ஆங்கில இதழுக்கு ஜனாதிபதி கூறியிருந்த கருத்துக்களும்ளிலிருந்தும் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கான அழுத்தங்களும் பிறந்துள்ளன என்றே செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழலில் புதுடில்லிக்கு ஜனாதிபதி திருமதி சந்திரிகா மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஆசீர்வாதத்தைக்கோரும் உள்நோக்கமுடையதாகும் எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகள் தொடர்லிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியா பச்சைக் கொடி காட்டுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம்.

எனினும் சிறீலங்காவின் ஒருமைப்பாட்டிற்குள்ளேயே தீர்வு காணப்பட முடியும் என்பதை ஜனாதிபதி திருமதி சந்திரிகா அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டுதான் பேச்சுவார்த்தை மேசை



இந்த எதிர்பார்ப்புக்களுக்கு அடித்தளமாகும்.

மூன்றாம் தரப்பின் ஈடுபாடு தேவை என்பது போர் முனையில் நிற்கும் இரு தரப்பினராலும் உணரப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்பாட்டாளரா? மத்தியஸ்தரா? என்பது குறித்து அபிப்பிராய பேதங்களே காணப்படுகின்றன.

பேச்சுக்கள்மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழலைத் தோற்றுவிப்பதில் இத்தகைய அபிப்பிராய பேதங்கள் பெரும் பங்கு வகிக்கக்கூடும். எனினும் அரச தரப்பிலும் சரி, புலிகள் தரப்பிலும் சரிகாணப்படுகின்ற ஆட்பலப் பற்றாக்குறை பேச்சு வார்த்தை மேசையை நோக்கி இருதரப்பினரையும் ஈர்க்கக் கூடும்.

இதேவேளை தென்னாபிரிக்காவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் இது போன்ற சில நாடுகபான இந்திய அரசின் கருத்துக் களை சிறீலங்கா ஒதுக்கி விட விரும்பாதிருக்கலாம் என்பதே இதற்கான காரணமாகும்.

சிறீலங்காவின் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் புதுடில்லிக்கான முதலாவது விஜயத்தை 1995ன் மார்ச்சில் திருமதி சந்திரிகா மேற்கொண்டிருந்தார். அப்போது விடு தலைப்புலிகளுடன் சிறீலங்கா அரசு நல்லுறவைக்கொண்டிருந்தது.

எனினும், புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலம் விடுதலைப்புலிகள் மத்தியில் மேலெழுந்த சந்தேகங்களும் பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு ஒரு காரணமாக இருந்தது என்பது அவதானிகள் அபிப்பிராயம்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள பிரபாகரனைத் தலைவராகக் கொண்ட விடுதலைப்புக்கு வரமுடியும். அவ்வாறாயின் ஏனைய தமிழ் அரசியல்கட்சிகள் தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட்ட துரோகிகள் என முத்திரை குத்திக்கொன்றொழிக்கும் நிகழ்ச்சிகள் கைவிடப்பட்டாக வேண்டும்.

ஏனைய அரசியல் சக்திகளுடன் சகிப்புணர்வையும்-சிநேகபூர்வ கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள புலிகள் முன்வராதவிடத்து பேச்சுவார்த்தை முயற்சியில் தீர்வுகாணும் நோக்கில் செலவிடப் படும் காலம் வீண் விரயமாகவே போய்விடும்.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் இணக்கம் ஏற்படாதவிடத்து ஏனைய அரசியல் சக்திகளுடன் அரசியற்தீர்வைக் காணாமல் தமிழ் மக்கள் மீது போரைத் தொடர்வதும் நியாயமற்ற தொன்றாகவே இருக்கும்.

இந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டிது!
யுத்தத்தின் சத்தங்களுக்கு இறுதி காணவும்
கலங்கி நிற்கும் மக்களின் வாழ்வில்
நிம்மதி பூக்கவும்
இந்த ஆண்டு இனிமையாய் மலரட்டும்!
வாசக நெஞ்சங்களுக்கு இனிய வாழ்த்துக்கள்.

## மதியை இழந்தோமா?

தனது வாழ்நாளின் ஒருபகுதியை பொது சேவையில் ஈடுபடுவதிலேயே கழித்த பொன். மதிமுகராஜா அவர்களும் துப்பாக்கி குண்டுக்கு இரையாகியுள்ளார். ஆற்றல் மிக்க பல தமிழ் தலைவர்கள், அறிவுஜீவிகள், சமூகநலனின் அக்கறை கொண்டவர்கள் அழிக்கப்பட்டது போலவே அவரும் அழிக்கப்பட்டுள்ளார். சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவரின் ஆற்றலும் அனுபவமும் தமிழ் மக்களின் விடிவுக்கும், விமோசனத்திற்கும் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டது போலவே இவரது ஆற்றலும், அனுபவமும் பயன்படாமல் செய்யப்பட்டுவிட்டது.



தமிழ் மக்களின் விடுதலையின் பேரால் இந்த அக்கிரமங்கள் நிகழ்ந்த போதும் மாறிவரும் உலகும், தமிழ் மக்களும் இதனை ஆதரிக்கப் போவதில்லை. ஜனநாயக பாரம்பரியங்களை, மனித உரிமைகளை மதிக்கின்ற எந்த சமூகமும் இந்தப்படுகொலைகளை அங்கீகரிக்காது. இந்தப்படுகொலைகளை புரிந்தவர்கள் தம்மை இனங்காட்டத்தயங்குவதிலிருந்தே இதனைப்புரிந்து கொள்ளலாம்.

அரசியலில் மாறுபட்ட கருத்து உடையவர்களை கொல்வதன் மூலம் அந்தக் கருத்துக்கள் அழிந்து போனதாக வரலாறு இல்லை. அவ்வாறு அழிக்க நினைப்பவர்கள் தற்காலிகமான வெற்றிகளைப் பெற்றாலும் அந்தக் கருத்துக்கள் என்றோ ஒருநாள் மீண்டும் பலம் பெறும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# கண்ணோட்டம்

## எதிர்காலத்திற்கான அத்திவாரம்

இந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டு பிறந்துள்ளது. புதியதொரு நூற்றாண்டுக்கு கட்டியம் கூறும் வகையில் உலகம் பல்வேறு மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு வருகின்றது.

உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிடக்கூடியவகையில் தொழில் நுட்ப வசதிகள் பெருகி வருகின்றன. இந்த மாறும் போக்கிலிருந்து எமது நாடும், மக்களும் விலகியிருக்க முடியாது.

ஆனால் மின்சார வசதிகள் துண்டிக்கப்படுவதால் கிழக்கு இருட்டுக்குள் மூழ்கடிக்கப்படுகிறது. போக்குவரத்து வசதிகள் கேள்விக்குள்ளாக்கப்படுவதால் யாழ்ப்பாணம் தனித்துப்போயுள்ளது. உணவு, மருந்துப்பொருட்களுக்கு வன்னி மக்கள் ஏங்கவேண்டிய நிலைமை வாய்த்துள்ளது. இந்த நிலைமை தமிழ் மக்கள் நாளாந்தம் அனுபவித்து வரும் வேதனைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் கோடிட்டுக் காட்டப் போதுமானவையாகும்.

எந்தப் பெரிய இலட்சியங்களை விடவும், சாதாரண மக்களின் நாளாந்த வாழ்வு முக்கியமானது. எனினும் இதனை உணர்ந்து கொள்ளும் மனப்பாங்கு தலைமைப் பாத்திரமேற்று வழிகாட்ட வேண்டியவர்களுக்கு வாய்க்கவில்லை என்பது துக்ககரமானது.

உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு போரில் ஈடுபடுவதே சரியென வாதிப்பவர்கள் தாங்கள் நேரடியாகப் போரில் பங்கேற்கும் நிலைமையில் இருப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மற்றையவர்களின் சாவுக்கும், அழிவுக்கும் காரணமாக இருந்து கொண்டு வீரம் பேசும் இத்தகைய கனவான்கள் நாளாந்த வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் இழந்து விடுவதில்லை.

போரின் மூலம் எட்டப்பட்ட அரசியல் இலக்குகளை விடவும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர் மற்றும் உடமை இழப்புக்களும், உடல் மன உளைச்சல்களுமே அதிகம். இதனால் வேண்டாம் இந்த யுத்தம் என்ற குரல் கேட்கத் தொடங்கியுள்ளது.

இதேவேளை ஆயுதமேந்திய எதிர்ப்பு இயக்கத்தைக் கைவிட்டு, ஜனநாயக அரசியல் அரங்கில் சக்திகளாகத்தொழிற்படுபவர்கள் மத்தியில் கருத்தொருமிப்பும், ஒன்றுபட்ட செயற்பாடும் இல்லை என்பது பெரும்பாலான மக்களின் கவலை.

அரசியல் தீண்டத் தகாத-பேசப்படாத-வெறுத்து ஒதுக்கப்படுவதான ஒரு விடயமாகவே பலராலும் கருதப்படுகிறது. சுயநல சக்திகளின் கபடத்தனமான நாடகமேடைதான் அரசியலரங்கம் என்ற எண்ணம் பரவலாக விதைக்கப்பட்டுள்ளது.

தன்னலம் மறந்து பொதுநலம் கருதிச் செயற்பட்ட பலரைக் கொண்டிருந்த முன்னாள் போராளிகள் மத்தியில் நிலவும் ஒற்றுமையீனமும், பரஸ்பர நம்பிக்கையீனங்களும் போலியாகப் புலம்புபவர்களுக்கு வெறும் வாய்க்கு கிடைத்த அவலாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

எனவே மக்கள் உண்மையாக அனுபவிக்கும் அவலங்களுக்கு தீர்வு காணும் நோக்கிலும், போலியாகப் புலம்புகிறவர்களின் கபடத்தனங்களை அம்பலப்படுத்தும் வகையிலும், இதுவரை கால இழப்புக்களுக்கீடான உரிமைகளை நிலைநாட்டவும், பொருத்தமான சூழ்நிலை தோற்றுவிக்கப்படுவது அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

இந்த இலக்கை எட்டுவதற்கு தமிழ் பேசும் மக்களுக்கு தலைமைதாங்க- வழிகாட்ட ஆசைப்படும் ஒவ்வொருவரும் தமக்குள் முக்கியமான தொருவினாவுக்கு விடைகண்டாக வேண்டும்.

காலம் எமக்குச் சாதகமாக கனியும் அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற பாங்கில் காலங்கடத்தும் பாணியை ஒரு சாரார் கைக்கொள்கின்றனர்.

ஆயுதப் போரைத் தொடர்ந்து நடத்துபவர்களின் வீரத்திற்கு ஒத்து பக்கப்பாட்டு பாடுவதே விவேகமானது என்பது இன்னுமொரு தரப்பின் நிலைப்பாடு. ஆயுதப் போரால் அழிவுகளே ஏற்படுகிறது.

இந்த அழிவுகரமான போக்கைத் தடுத்து நிறுத்தி ஆக்கபூர்வமான மாற்றுவழிகண்டாக வேண்டும் என்பது இன்னுமொரு அணியின் எண்ணம். இந்த மூன்று நிலைப்பாடுகளில் எது பொருத்தமானது என்பதற்கு தெளிவான விடைகிடைக்கும் போதே அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிய எண்ணங்கள் முளைவிடக்கூடும். இந்தக் கேள்விக்கான விடையே கருத்தொருமிப்பும் ஒன்றுபட்ட செயற்பாடும் கட்டியெழுப்பப்படுவதற்கான அத்திவாரமாகும்.

# செவிகளில் விழுந்த குரல்கள்.

### சொந்தக் கால்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், 87,680 குடும்பங்கள் இடம் பெயர்ந்தவர்களுக்கான உலருணவு நிவாரணத்தைப் பெறுகின்றன. ஒரு குழந்தை எப்போதும் தவழ்ந்து கொண்டிருக்காது. ஒரு நாள் நடந்தே தீரவேண்டும். அதேபோலவே எப்போதும் உலருணவு நிவாரணத்தை நம்பியிருக்கக்கூடாது. நாம் நமது சொந்தக் காலில் நிற்க வேண்டும்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
க. சண்முகநாதன்.

### யாழ்ப்பாணத்தில் கல்வி

பல விஞ்ஞானப் பட்டதாரிகளையும், டாக்டர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கிய யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று விஞ்ஞானக் கல்வி குறைந்து வருகிறது.

யாழ், பல்கலைக்கழக பேராசிரியர்
வி.கே. கணேசலிங்கம்.

### முடிவின்றித் தொடரும்

போரிடும் இரு தரப்பினரையும், சமாதானத்தீர்வு காணும் அளவுக்கு அழுத்தம் போடக்கூடிய முயற்சி எதுவும் காணப்படவில்லை. இரு தரப்பினர் மத்தியிலும் சமாதானத்தீர்வுக்கான அவா காணப்படவில்லை. முதலில் தமிழர் உரிமைகளை அங்கீகரிக்கும் அளவுக்கு சிங்களத் தரப்பினர் மத்தியில் பொதுக் கருத்து ஏற்பட வேண்டும். இரண்டாவதாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதுபற்றி நேர்மையான விருப்பத்தை விடுதலைப்புலிகள் வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் தம்மைத்தாமே மீள் பரிசீலனை செய்வதன் மூலமே இது சாத்தியமாகும். இத்தகையதொரு நிலமைக்கான வாய்ப்பு மிகவும் இருள் சூழ்ந்ததாகவே உள்ளது. எனவே போர் முடிவின்றித் தொடரும் நிலமையே காணப்படுகிறது.

ஐலண்ட் இதழில்
டி.பி.எஸ். ஜெயராஜ்.

### காற்றில் கலக்கும் கோஷங்கள்

அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக மாத்திரம் எமது நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் சமாதானத்தை ஒரு போதும் அடைந்துவிட முடியாது. அதற்காக அரசியல் அதிகாரங்களை அமுல்படுத்துகின்ற சபைகள் இல்லாமல் இருக்க முடியாது. ஐக்கிய இலங்கை என்று சப்தமிட்டு கோஷம் எழுப்புகின்றோம். குரல் கொடுக்கின்றோம். எல்லாமே காற்றில் கலந்து விடுகின்ற கோஷங்களாகவே இருக்கின்றன. இக் கோஷங்கள் அனைத்தும் சமூகங்களுக்கிடையே பரிவர்த்தனை மூலம் சாதிக்கப்படல் வேண்டும்.

வடக்கு கிழக்கு இலங்கை நூல் வெளியீட்டில்
அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்.

### அழுத்தம் கொடுக்க வேண்டும்

தனிநாட்டை வலியுறுத்துவதைப் புலிகள் கைவிட வேண்டும். ஜனநாயக வழியிலான தமிழ் அரசியல் கட்சிகளுடன் சகிப்பு உணர்வைப் பேணி, அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதற்காக இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களும், சர்வதேச அரசாங்கங்களும், இராஜதந்திர வட்டாரங்களும் புலிகளுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட
அறிக்கையில் வலியுறுத்து.

### சொந்த மக்களுடன் பேசட்டும்

உண்மையில் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை விரும்புகின்றார்கள் என்றால் முதலில் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். திரு. பிரபாகரன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் தனது சொந்த மக்களுடன் பேச வேண்டும். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கும், அரசியல் உரிமைகள் இருக்கின்றன. என்பதை நிரூபிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் பீலிக்ஸ் பெரேரா எம்.பி.

### எரிந்து கொண்டுதான் இருக்கும்

சிறுபான்மை இனத்தவர்களுக்கு சீனி போளையைக் கொடுத்து ஆயுதமேந்திய இளைஞர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? பொதுமக்களுக்கு பலூனைக் காட்டிவிட்டு இளைஞர்களின் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? இறுதியில் சீனி கரைந்துவிடும் பலூன் வெடித்து விடும். எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் எரிந்து கொண்டுதான் இருக்கும்.

பிரபல சிங்களப் பாடகர்
விஷாரத குணதாசா கபுகே.

### துக்கம் அடைகிறோம்

துப்பாக்கிக் கலாச்சாரம் யாழ்ப்பாண மக்களின் மனநிலையை இப்போதும் வெல்லக்கூடியதாகவுள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் கவலை அடைகின்றோம். உள்ளூர் ஜனநாயக அமைப்புக்கள் தொழிற்படுவதற்கு விடுதலைப்புலிகள் முட்டுக்கட்டை போடுவது பற்றியும் நாம் துக்கம் கொண்டுள்ளோம்.

நிக். அச்பரி
இரண்டாவது செயலாளர்
பிரித்தானிய தூதுவராலயம் கொழும்பு.

### ஜனநாயகமும் இல்லை

அபிவிருத்தியின் நவீன கருத்தூக்கமாவது அதிகாரப் பரவலாக்கம், ஜனநாயகம், அபிவிருத்தி ஆகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அதிகாரப் பரவலாக்கமும் இல்லை. ஜனநாயகமும் இல்லை. அபிவிருத்தியும் இல்லை.

யாழ், பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில்
விரிவுரையாளர் கே. சின்னத்தம்பி.

### ஏனோ தானோ போக்கு

புதிய மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் நாம் பணிகளைச் செய்ய வேண்டும். எம் மத்தியில் இருக்கின்ற சமூக மதத் தலைவர்கள் பெரியளவில் பணிகளைச் செய்யவில்லை. ஏனோ தானோ என்ற போக்கில் செயற்படுகின்றனர். நாம் எல்லா விடயங்களிலும் குறைகளையும், தவறுகளையும் மட்டும் பார்க்காது நல்லவற்றையும் பார்க்கப் பழக வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில்
துணை வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

### எல்லாமும் இழந்துள்ளனர்

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவழியினரை மட்டுமே நான் பிரதிபலிக்கிறேன். இந்த மக்கள் பல ஆண்டுகளாக எந்த உரிமையும் இல்லாமலிருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் எல்லா உரிமைகளையும் அனுபவித்தனர். அவர்களுக்கென ஆற்றல்மிக்க அரசியல் தலைமைத்துவமும் இருந்தது. ஆனால் இப்போது அவர்கள் அனைத்தையும் இழந்துள்ளனர்.

அமைச்சர் தொண்டமான்.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

Post Bag: 1041, Madras-17, India.

P.Fach: 506, Bern-17, Switzerland.

P.Fach: 66, 59514 Welver, Germany.

பள்ளிமுனை வீதி, உப்புக்குளம். மன்னார். ☎ 023-2370

54, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-22398

310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021-2022

22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22724

**மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):**

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**Web site Address:** http://www.epicnews.com

# இனிய தமிழ் மக்களே!...

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

அண்மையில் தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கை வந்த பாராளுமன்றக் குழு இரு விடயங்களைத் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளது.

1. தமிழ் கட்சிகள் ஐக்கியப்பட்டால் அரசாங்கத்துக்கு கூடுதலான அழுத்தங்களைக் கொடுக்க முடியும்.

2. தென்னாபிரிக்காவில் பேச்சு வார்த்தை நடந்த பொழுதும் கூட சிறிய பெரிய கட்சிகள் என்ற வேறுபாடின்றி அங்கு தென்னாபிரிக்க விடுதலைக்குழைத்த 26குழுக்களுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டது.

**ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக்கொடுக்க முடியும். ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்க முடியும். ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே மக்கள் மத்தியில் ஜனநாயகத்தை உருவாக்க முடியும். ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே எமது அடிப்படை உரிமைகளுக்கான சர்வதேச ஆதரவைத் திரட்டமுடியும்.**

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனாலும் சரி, இல்லையேல் பழம்பெரும் ஜனநாயகக்கட்சி என்று செயற்படும் தமிழர் விடுதலைக்கூட்டணியானாலும் சரி அல்லது ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ளோம் என்று கூறி அவ்வப்பிராந்தியங்களில் ஆயுத முனையில் குட்டி தர்பார்களை நடத்துவோருக்கும் சரி தென்னாபிரிக்கா பாராளுமன்றக்குழுவின் செய்திகள் புரிந்ததா என்பதே கேள்விக்குறிதான்.

மேற்கண்ட இரு விடயங்களும் புதிய விடயங்கள் அல்ல. எனினும், தமிழ் மக்களால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும் விடயங்கள். எனினும், தென்னாபிரிக்கக் குழு அவர்களது அனுபவத்திலிருந்து இவற்றைக் கூறுகின்றார்கள் என்னும் பொழுது, குறைந்த பட்சம் அதன் முக்கியத்துவத்தையாவது நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரையில் தாம் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கருத்தும், ஏனையோர் அழித்தொழிக்கப்படவேண்டிய துரோகிகள் என்ற கருத்தும், உலகத்தின் ஜனநாயக சக்திகளால் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை புலிகள் இனியாவது உணரவேண்டும்.

அதனைப் போன்றே இயக்கங்களின் ஐக்கியத்தை கூட்டணி உட்பட சகல தமிழ் கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும். அன்று தந்தை செல்வா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் போன்றோர் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கினார்கள். அது தமிழ் மக்கள் மத்தியில் ஓர் பேரெழுச்சியை உருவாக்கியது.

அதுவே பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக உருவம் பெற்றது. அன்று எவ்வாறு தமிழ்க்கட்சிகள் ஐக்கியப்பட வேண்டுமென்பது காலத்தின் கட்டாயமாக இருந்ததோ அதே போல் இன்றும் கூட தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படவேண்டியது காலத்தின் தேவையாகும். இவற்றைப் புரியாது செயற்படுவது முழுத் தமிழ்ச்சமூகத்துக்கும் நாங்கள் செய்யும் துரோகமாகும்.

ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக்கொடுக்க முடியும்.

ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை கொடுக்க முடியும்.

ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே மக்கள் மத்தியில் ஜனநாயகத்தை உருவாக்க முடியும்.

ஐக்கியப்பட்ட தமிழர் அமைப்பொன்றாலேயே எமது அடிப்படை உரிமைகளுக்கான சர்வதேச ஆதரவைத் திரட்டமுடியும்.

இவற்றை கூட்டணி உட்பட ஏனைய தமிழ்க்கட்சிகள் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் வேதனைக்குரியது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசு பேச்சு வார்த்தைக்கு முன்வரவேண்டுமென எல்லாத் தமிழ்க்கட்சிகளும் அறிக்கை வெளியிட்டு வருகின்றன. அத்துடன் அவர்களது பணிமுடிந்துவிட்டதாகவே அவர்கள் கருதுகின்றார்கள்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அதற்கான அழுத்தங்களை உருவாக்கும் விதத்தில் எம்மால் ஏன் செயற்பட முடியவில்லை? இதனைப்போன்றே தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாம் ஒன்றுபட்டால் தீர்க்க முடியும்.

ஆனால் ஐக்கியத்தை பற்றிப் பேசினாலே தமிழ்க்கட்சிகளுக்கு கசப்பாக இருக்கின்றது. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது போல் காலம் கடந்தபின் நாம் விடும் தவறுகளுக்காக வருந்துவதில் அர்த்தமில்லை. ஆகவே இனியாவது ஐக்கியத்தை பற்றியோசிப்போம்.

**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

கடந்த 15வருடங்களுக்கு மேலாக, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவென ஓர் வன்முறைப் போராட்டம் நடந்து வருகின்றது. தமிழ்த் தேசிய இனம் சிங்கள அரசுகளால் நசுக்கப்படுகின்றது, அடக்கப்படுகின்றது. எமது உரிமைகளை சிங்கள அரசிடம் கேட்டுப்பெறமுடியாது அதனை போராடித்தான் பெற முடியும் என்ற அடிப்படையிலேயே சிறீலங்கா அரசுகளுக்கெதிரான போராட்டம் தமிழ் மக்கள் மத்தியில் வலுப்பெற்றது.

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், எல்.ரி.ரி.ஈ என்று ஐந்து இயக்கங்கள் சிறீலங்கா அரசுக் கெதிரான வன்முறைப்போராட்டத்தில் முன்னணி வகித்தன. ஆனால், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாகவும், தனிப்பெரும் தலைவராகவும் வர விரும்பிய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழர் விடுதலைக்காகப் போராடிய ஏனைய தமிழ்க்கட்சிகளை, ஆயுத ரீதியில் தோற்கடிக்கும் முயற்சியிலீடுபட்டார்.


இதன் பொருட்டு சிறீசபாரட்ணம், பத்மநாபா, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற பல தமிழர் தலைவர்களை சுட்டுக்கொலை செய்தார்கள். இன்னும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் கொலை செய்தார்கள். இதனால் இயக்கங்கள் மத்தியில் என்றும் மாற்ற முடியாத வன்மத்தை உருவாக்கினார்களே தவிர,அவர்களால் வேறொன்றையும் சாதிக்க முடியவில்லை.

புலிகளின் ஆயுத அச்சுறுத்தலும், ஜனநாயகவிரோத செயற்பாடுகளும், தமிழ் இயக்கங்களை கொழும்பை நோக்கித் தள்ளின என்பது உண்மையே. அதில் சில இயக்கங்கள் தமது இருப்பைத்தக்க வைத்துக்கொள்வதற்காக இராணுவத்துடன் இணைந்தும் செயற்பட்டுவருகின்றது.

இதனை அரசாங்கம் தனது பிரச்சாரத்துக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. அதாவது புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் அரசை ஆதரிக்கின்றன என்றதொனியிலேயே அரசு தனது பிரச்சாரத்தை செயற்படுத்திவருகின்றது.

இது ஒரு புறமிருக்க, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்காது, என்றும் தமிழ் மக்கள் முழுமையாக நம்புகின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வுதானால் எந்த ஒரு அரசின் மீதும் தமிழ் மக்களுக்கு ஒரு வீத நம்பிக்கை கூடக்கிடையாது.

தமிழ்க்கட்சிகளின் ஐக்கியமின்மை, கையாலாகாத்தனம் அரசு சார்புப் போக்கு ஆகியனவும் அரசின் மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையீனமும் புலிகளின் ஆயுதப் போராட்டமும் அர்த்தமற்றதாகி வருகின்றதென்ற சிந்தனையும், என்னவாவது நடந்துவிட்டுப் போகட்டும் என்ற விரக்தி நிலைக்கே தமிழ் மக்களைக்கொண்டு சென்றுள்ளது.



தமிழ்க்கட்சிகளுக்கும், தமிழ் மக்களுக்குமிடையில் உறவுகள் பலப்படு வதற்குப்பதிலாக இடைவெளி அதிகரித்தே செல்கின்றது. இவை எமது சமூகத்துக்கு ஆரோக்கியமான குணாம்சம் அல்ல என்பதை மக்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தினூடு, மாகாணசபை ஒன்று உருவானது. அதை ஓர் அடித்தளமாகக் கொண்டு செயற்பட்டிருந்தால், இன்னும் கூடுதலான அதிகாரங்களைப்பெற்றுக்கொள்ள நாம் முயற்சித்திருக்கலாம்.

ஆனால் ராஜீவ் காந்தியை கொலை செய்ததானது, எமக்கிருந்த ஒரேயொரு ஆதரவையும் இல்லாமல் செய்தது. இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவரீதியில் ஒரிரு வெற்றிகளைப் பெற்றாலும், அரசியல் ரீதியில் தீண்டத்தகாதவர்களாகவே சர்வதேசமும் அவர்களை நோக்குகின்றது. இந்நிலையில் தமிழீழம் தனிநாடு என்ற விடயங்களும் வெறும் வெற்றுக்கோசங்களாக, அங்கீகாரமற்ற கோசங்களாகவே இருந்து வருகின்றது.

தனிநாட்டுக்கான போராட்டம் என்பது வெறுமனே சில இராணுவ வெற்றிகளில் மாத்திரம் தங்கி இருக்கவில்லை. மாறாக ஓர் தனிநாட்டை அங்கீகரிக்குமளவுக்கு எமக்கு சர்வதேசரீதியில் ஆதரவு வேண்டும்.

ஆனால் எமது போராட்டத்துக்கு ஆதரவாக இருந்த இந்தியா கூட இன்று எம்முடன் இல்லை. இந்நிலையில் தனிநாட்டுக்கான போராட்டம் என்ற பெயரில் யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

அரசின் மீதுள்ள நம்பிக்கையீனமும், அரசின் அடாவடித்தனமும், மக்களுக்கு புலிகளின்பால் ஓர் கரிசனையைத் தோற்றுவிக்கலாம். அதே சமயம் புலிகளின் யுத்தமென்பதும் அர்த்தமற்றதும், அநாவசிய அழிவுகளைக் கொண்டதாகவும் இருக்கும் போது அதனை ஆதரிப்பது சரியா என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும்.

**எனவே அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

"மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது மணி கட்டின மாடு சொன்னால் தான் கேட்கும்" என்பது போல தமிழ்க்கட்சிகள் ஐக் கியப்படவேண்டும், தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஜனநாயகம் வேண்டுமென்பதை தென்னாபிரிக்க பாராளுமன்றக்குழுவும் வலியுறுத்திச் சென்றுள்ளது. இனியாவது இது தமிழ்க்கட்சிகளின் மண்டையில் உறைக்குமா.

**இப்படிக்கு**
**அன்புடன்**
**சுரேஷ்**

# உருமாறிய உலக அபிப்பிராயம் உணர்த்தும் விடயம் என்ன?

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைக்கான குரல் உலகரங்கில் உரிய கவ்னத்தைப் பெறவில்லை. தமிழர்களின் போராட்டத்திலுள்ள நியாயங்களை உலகம் கண்டுகொள்ளவில்லை. தமிழ் மக்கள் நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் அவலங்கள் உலகின் இதயத்தை உலுக்கவில்லை. இவ்வாறான அபிப்பிராயங்கள், இப்போது பரவலாக வெளிப்படுத்தப்படுகிறது.

இது உண்மையானது தானா? தமிழ் மக்களுக்குச் சார்பாகக் கனிந்துவந்த சர்வதேச சூழல் எப்படி உருமாறியது? இவை இரவோடிரவாக ஏற்பட்ட திடீர் மாற்றங்களா? இவை குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

1970ல் சிறிமாவோ அரசாங்கம் பல்கலைக்கழக புகுமுகத் தேர்வில் இனவாரித் தரப்படுத்தலை அறிமுகப்படுத்தியதையடுத்து தமிழர்களின் ஆயுதமேந்திய எதிர்ப்பு இயக்கம் கருக்கொண்டது வரலாறு. இந்தக் காலப்பகுதியிலேயே பெருமளவுக்கு தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குறிப்பாக லண்டன் போன்ற நகரங்களுக்கு புலம்பெயரத் தொடங்கினர்.

இவ்வாறு வெளியேறிய பலரும் உலகரங்கில் இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் பற்றி எடுத்துரைத்தனர். இதன் விளைவாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைக் குழு (Minortity Rights Group)சர்வதேச ஜுரர்கள் சபை (International Juris Commission) போன்ற அமைப்புக்கள் 1975லேயே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டன.

அது மட்டுமல்ல இக்காலப் பகுதியிலேயே பாலத்தீன விடுதலை இயக்கம் தமிழிளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கத் தொடங்கியிருந்தது இப்போதும் இரகசியமானதல்ல.

உலகரங்கில் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியமையின் வெளிப்பாடாக 1978ல் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலம் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியது. அந்த மாநிலத்தின் ஆளுநர் எட்வேர்ட் கிங், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரத்தை அழைத்துக் கௌரவித்திருந்தார்.

**பாண்டி பசார் சம்பவமும் இந்தியாவும்**

1982ன் மே 20ஆம் திகதியன்று சென்னையிலுள்ள பாண்டிபசார் பகுதியில் இலங்கைத் தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த இரு குழுவினருக்கு இடையே துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் (புளொட்) சேர்ந்த ஜோதீஸ்வரன் (கண்ணன்) காயமடைந்தார். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களான பிரபாகரன், ராகவன் புளொட்டைச் சேர்ந்த சிவனேஸ்வரன் (நிரஞ்சன்) உமாமகேஸ்வரன்(முகுந்தன்) ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கையில் சிறீலங்கா அரசாங்கம் இலங்கையில் தேடப்படுபவர்கள் எனத் தெரிவித்து நாடு கடத்தும்படி பலமாக வற்புறுத்தியது.


சிறீலங்காவின் பொலீஸ்மா அதிபர் புதுடில்லிக்கு பறந்து சென்று நாடு கடத்தும்படி கோரினார். திருமதி இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் சிறீலங்காவின் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்துவிட்டிருந்தது.

அது மட்டுமன்றி,1983ன் கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து இதே இயக்கங்கள் உட்பட தமிழ் அரசியல் சக்திகளுக்கு மறைமுகமாக ஆதரவு காட்டிவந்தது. 1983 முதல் 1987வரை சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதி பலிக்கும் சக்தியாக இந்தியா

தொடர்ச்சி 09ம் பக்கம்

# எழுதுகோல்கள் நிமிரட்டும் இருட்டடிப்புக்கள் நீங்கட்டும்

செய்திப்பத்திரிகை வெளியீடு என்பது இலாபத்தை மட்டும் தேடும் ஒரு தொழிலல்ல. பக்கச் சார்பின்மை, நடுநிலமையான அணுகுமுறை, என்பவற்றின் அடிப்படையில் வழிகாட்டும் கடப்பாடு அவற்றிற்கு உண்டு. குறிப்பாக தமிழ் மொழியில் வெளியிடப்படும் பத்திரிகைகள் தமிழ் மக்கள் படும் துயரங்களை நடுநிலமையாக நின்று துணிகரமாக எடுத்துரைப்பது காலத்தின் தேவையாகும். துப்பாக்கியைவிட, பத்திரிகை எழுத்தாளனின் கையிலுள்ள பேனாபலம் வாய்ந்தது என்பது தெரிந்ததே.




கடந்த காலங்களை ஒருமுறை திருப்பிப் பார்ப்போம். 1990 முதல் 1995வரை யாழ்ப்பாணம் முழுமையாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை பத்திரிகை வாசிக்க கிடைக்கவில்லை

மாற்றுக்கருத்து எதுவும்முன் வைக்கப்படக்கூடிய நிலையிருக்கவில்லை. முழுக்க, முழுக்க புலிகளால் விரும்பப்படக்கூடிய செய்திகள் பிரசுரமாகின. அவர்கள் செய்யும் தவறுகள் பற்றியோ, மக்களுக்கு அவர்களால் ஏற்பட்ட துன்பங்கள் குறித்தோ எடுத்துரைக்கப்பட முடியவில்லை.

ஆனால் இன்றைய நிலை வேறு. இராணுவம் விடும் தவறுகளை சுட்டிக்காட்ட முடிகிறது. படையினரின் முடிவுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து எடுத்துரைக்கக்கூடியதாக உள்ளது.

பாலியல் வன்முறைகள்,பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், கைதுகள், மற்றும் துன்புறுத்தல்கள் பற்றித் தட்டிக்கேட்டு நீதிகோர இயலுமானதாக உள்ளது. படையினருக்கு எதிராகவும் குரல் கொடுக்க முடிகிறது.

இந்த நிலமையில் அவதூறு பரப்புவதாகக் கூறி பத்திரிகைகள் மீது படையினர் பழிவாங்குவதாக எந்த முறைப்பாடும் ஏழவில்லை. எனவே ஜனநாயகம் செயற்படத் தொடங்கியுள்ளதாக கருதலாம்.

ஐ.தே.க ஆட்சிக் காலத்தின் போது படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை. ஆனால் இப்போது படையினருக்கு கட்டுப்பாடுகள் பல. நீதிமன்ற நடவடிக்கைகள் கூட எடுக்கப்படுகின்றன.

எனினும், வட்டுக்கோட்டையில் மட்டுமல்ல காலியிலும் கூட படையினரின் அடாவடித்தனங்கள் அத்துமீறல்கள் இடம்பெறுகின்றன என்பது உண்மைதான்.

ஆனாலும் தவறு விடுபவர்கள் குறித்து முறையிடவும், நீதிபதிகளால் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் நீதிபதிகளால் விசாரிக்கப்படவும், முடிந்துள்ளது. இவை இந்த மண்ணில் ஜனநாயக நடைமுறைகள் உயிர்பெறத்தொடங்கியுள்ளமைக்கு சில எடுத்துக் காட்டுகள்.

இராணுவத்தை விமர்ச்சிப்பது போல அரசாங்கமும் பத்திரிகைகளின் கடும் விமர்சனத்திற்குள்ளாகிறது. தமிழ் அரசியல் கட்சிகள் குறித்தும் தமிழ்ப் பத்திரிகைகள் கேலியும், கிண்டலும் கலந்த தொனியில் விமர்ச்சிக்கின்றன.

விடுதலைப்புலிகள் தான் கதாநாயகர்கள் போலவும், ஏனையவை நகைகச்சுவைக்கும், கேலிக்கும் உரிய பாத்திரங்களாகவும் எழுத்தாளர்களால் கருதப்படுகின்றன.

படையினர், மற்றும் தமிழ்க்கட்சிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக கண்டனம் தெரிவிக்கவும், குரல் கொடுக்கவும் துணியும் அளவுக்கு விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் கண்டுகொள்ளப்படுவதாக இல்லையென்பது கவலைக்குரியது. இத்தகைய வேளைகளில் பத்திரிகைச் சுதந்திரம், துணிவு எல்லாம் மௌனமாகத் தூங்கிப் போவதே வாடிக்கை. உதாரணத்திற்கு ஒரு சிலவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

1. புலிகளால் பணம் வசூலிக்கப்பட்டு, மன்னார் கடற்பகுதி ஊடாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வள்ளங்களில் சில கடலில் மூழ்கிய போது நூற்று இருபதுக்கும் அதிகமானவர்கள் அநியாயமாக உயிர்துறக்க நேரிட்டது. குழந்தைகள் உட்பட உயிரிழந்தனர். 1996ல் இச் சம்பவம் நடைபெற்றபோதும் இந்த உயிரிழப்புக்களுக்காக, விடுதலைப்புலிகளைக் கண்டிக்க எவரும் முன்வந்ததாக இல்லை.

2. 08.04.1997 அன்று திருநெல்வேலியில் புலிகளின் கைக்குண்டு வீச்சால் து. பிரியா (வயது 24), பல்கலைக்கழக மாணவி, பெ.ஜெராணி (வயது 25), சீ. ஈசன் (வயது 23) ஆகியோர் படுகாயமடைய நேரிட்டமை.

3. 25.08.1995ல் தீவுப் பகுதிக்கான மக்கள் போக்குவரத்தைத் தடைசெய்யும் வகையில் "ஐரிஸ் மோனா" என்ற கப்பல் கடத்தப்பட்டமை.

4. 01.07.1997ல் எம்.வி. மிஷன். என்ற கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை.

5. 08.07.1997ல் மொராங் பொங் என்ற கப்பல் கடத்தப்பட்டமை.

6. பாடசாலை மாணவர்களின் சீருடையில் வந்து படையினர் மீது தாக்குதல்கள் மேற்கொண்டமை. 22.04.97ல் வடமராட்சி மாலு சந்தி முகாம் பகுதியிலும், மட்டக்களப்பு நகரிலும் இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

7. விநியோகக் கப்பல்கள் மீது தாக்குதல் தொடரும்; கடல்வழி விநியோகத்தைத் தடுப்போம் என்ற தலைப்பில் புலிகள் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் யாழ் குடாநாட்டுக்கான கடல்வழி விநியோகம் தடுக்கப்படுவது போராட்டத்தின் அவசியமான தேவை எனக்குறிப்பிடப்பட்டிருந்தது.

8. யாழ் குடாநாட்டு வர்த்தகர்களுக்குச் சொந்தமான பொருட்களுடன் வடபகுதி நோக்கி வந்த "பிரின்சஸ் காஷ்" கப்பல் கடத்தப்பட்டமை.

9. யாழ்ப்பாணம் பெரியகடைப்பகுதியில் சலுசலா விற்பனை நிலையம் மீது 12.04.1998ல் கைக்குண்டு வீசப்பட்டமை. இதில் கணக்காளராக கடமை புரிந்த தமிழ் யுவதி ஒருவர் பலியானார் மற்றும் 19பேர் வரை காயமடைந்தனர்.

10. இவை அனைத்தையும் மிஞ்சும் வகையில் 29.09.1998ல் பலாலியிலிருந்து புறப்பட்ட லயன் எயார் விமானம் பயணிகளுடன் சுட்டுவீழ்த்தப்பட்டமை.

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய மக்கள் விரோத செயற்பாடுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதில் ஏறத்தாழ எல்லாத் தமிழ்த் தினசரிகளும் ஒத்த போக்கையே கடைப்பிடிக்கின்றன. ஆனால் புலிகளின் இராணுவ சாதனைகள், போர் வெற்றிகள் பற்றி உற்சாக உணர்ச்சிகள் ஊட்டும் வகையிலான செய்திகள் தாராளமாக வெளிப்படுத்திக்கொள்கின்றன.

தமிழ் மக்களின் போக்குவரத்திற்கு அரசாங்கம் ஒழுங்குகளை மேற்கொள்ளவில்லை. சிவில் நிர்வாகம் சீராக அமுல் படுத்தப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமளவுக்கு இவற்றைச் சீர்குலைக்கும் செயற்பாடுகள் குறித்த கண்டனங்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை.

எனவே தமிழ் மக்களின் சேம நலன்கள் என்ற கோணத்திலிருந்து தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கூட சிந்திப்பதாக இல்லை என்றே கருதத் தோன்றுகிறது. இதேவேளை புலிகளின் இராணுவ வெற்றிகளை சிலாகிப்பவர்கள் கூட அவர்களது அரசியல் இலக்காக கொள்ளப்படும் தமிழீழக் கோரிக்கையை அங்கீகரிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இனத்தின் விடுதலைக்காகவெனச் செயற்பட்ட இயக்கங்கள் பலப்பரீட்சையிலிறங்கிய போது சகோதர படுகொலையைக் கண்டிக்காமல் மௌனம் காத்தமையின் விளைவுகளையே இன்று எல்லோரும் அனுபவிக்க வேண்டியதாகவுள்ளது. உலகம் நவீனமயமாகிக் கொண்டிருக்கிறது.

ஆனால் எமது பிரதேசம் போரில் சிக்கி சிதைந்தும், அழிந்தும் வருகிறது. ஓரளவுக்கேனும் புனரமைக்க முற்படும் வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளும் கூட முட்டுக்கட்டை நிலையை எதிர்நோக்கி வருகின்றன. விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் நொந்து போயுள்ள மக்களை மேலும் நோக வைப்பதாகவுள்ளது. இந்த நிலமை தொடரக்கூடாது இவற்றை நிறுத்த வேண்டும். இதையே இன்று தமிழ் மக்கள் விரும்புகின்றனர். என்பேன்.

**க. ஞானப்பிரகாசம்**
**யாழ்ப்பாணம்.**

# தமிழ் மொழி அமுலாக்கம் நம்பிக்கைகளுக்கான அத்திவாரம்.

தமிழ்மொழி பேசும் மக்களை திருப்திப்படுத்தக்கூடியளவுக்கு இலங்கையில் தமிழ்மொழி அமுலாக்கம் இடம்பெறுவதில்லை என்பது பகிரங்கமானதொரு உண்மை. தமிழ்மொழியைப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் கூடிய உத்தியோகத்தர்கள் அரச அலுவலகங்களில் போதுமானளவுக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பது இதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று.

ஆனால் தேசத்தின் ஒரு பகுதி மக்களின் நலன்கள் சம்பந்தப்பட்ட இந்த விடயத்தில் இது ஒரு சாட்டுப்போக்காக இருக்க முடியாது. தமிழ்மொழி அமுலாக்கப் படுவதில் காட்டப்படும் அசிரத்தையான போக்கானது ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவமான பிரஜைகளாக வாழ ஆர்வம் கொண்டிருப்பவர்களை சங்கடப் படுத்தும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

எனவே தான் தமிழ்மொழியில் கடமையாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள் அரசாங்க அலுவலகங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டியது அவசரமான அவசியமானதொரு தேவையாகும்.

**பின்புலம்**

தேசிய அரசாங்க சபையின் தெரிவுக்குழு மொழி அமுலாக்கல் தொடர்பான அறிக்கையை 1946லேயே வெளியிட்டுள்ளது. அரசாங்க மொழி ஆணைக்குழு உத்தியோகபூர்வ மொழி தொடர்பான இறுதி அறிக்கையை 1953 லேயே வெளியிட்டுள்ளது.

சிங்களத்திலும், தமிழிலும் அரசாங்க அலுவல்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்த இரு அறிக்கைகளிலும் கூட தெளிவு படுத்தப்பட்டுள்ளது. உத்தியோக மொழி, மற்றும் தேசியமொழி என்பன தொடர்பாக அரசியலமைப்பின் 13வது மற்றும் 16வது திருத்தச் சட்டங்களில் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருக்கின்ற போதும் கூட தமிழ்மொழி அமுலாக்கல் செம்மையாக நடைமுறைக்கு உள்ளாகவில்லை என்பது விசனிக்கத் தக்கதாகும்.

**ஆளணி, வளப்பற்றாக்குறை**

அரசாங்க அலுவல்களில் தமிழ்மொழி நடைமுறைப்படுத்தப் படுவதிலுள்ள பிரதான முட்டுக்கட்டையானது தமிழ்மொழியில் பணியாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள் போதியளவில் நியமிக்கப் படாமையாகும். எனினும் தமிழ் மொழி மூலம் பணியாற்றக்கூடியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இல்லை.

அண்மையில் உத்தியோக பூர்வ மொழி திணைக்களம் மேற்கொண்ட ஒரு ஆய்வின் மூலம் 402 அரசாங்க அலுவலகங்களில் 22மொழி பெயர்ப்பாளர்கள் மட்டுமே சேவையில் இருப்பது தெரியவந்துள்ளது.

மொழி பெயர்ப்பாளர்கள் மட்டுமன்றி எழுதுவினைஞர்கள், தட்டச்சாளர்கள் உட்பட பல்வேறு தரங்களிலும் போதுமான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் போதே தமிழ்மொழி செம்மையாக அமுல்படுத்தப்படலாம். இருக்கின்ற போதும், இந்த நியமனங்களை செய்யக்கூடிய வகையிலான அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

26 யூன் 1997ல் ஒவ்வொரு அரசாங்க அலுவலகங்களிலும் இருமொழிகளிலும் பணியாற்றக் கூடிய ஒருவர் எழுதுவினைஞர் மட்டத்தில் நியமிக்கப்படவேண்டுமென ஜனாதிபதியின் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் சுமார் ஒரு வருடத்தைக் கடந்துள்ள போதும் இந்த அறிவுறுத்தல் அமுல்படுத்தப்பட்டதாக இல்லை.


**மனமின்மை**

பாரிய சட்டத் திருத்தங்களின் தேவையில்லாமல், மேற்கொள்ளப்படக்கூடிய விடயங்களாக இருக்கின்றபோதும், நடைமுறையில் தமிழ்மொழி அமுலாக்கல் குறித்து அசிரத்தை காட்டப்படுகின்றது. இது தமிழ்மொழி பேசும் மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு உதவக்கூடியதாக இல்லை.

தேசிய மொழி மற்றும் உத்தியோக பூர்வ மொழி விடயத்தில் இருக்கக்கூடிய சட்ட வடிவங்கள் அமுல்படுத்தப்படுவதற்கு அமைச்சரவைத் தீர்மானம் அவசியமானதாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# இரணைதீவு இலங்கையின் “லொக்கர் பீ”



“லொக்கர் பீ” ஸ்கொட்லாற்றின் ஓர் சிறிய நகரம். இங்கு தான் 10ஆண்டுகட்கு முன்னால் 259 பயணிகளுடனும் 11விமான சிப்பந்திகளுடனும் பறந்து கொண்டிருந்த பான் ஆம் (PanAm) 103 பயணிகள் விமானம் சிதறி வீழ்ந்தது. இதில் பயணம் செய்த 270பேரும் மாண்டனர்.

> லயன் எயார் விமான அனர்த்தத்தில் உயிரிழந்த பயணிகளுக்கான காப்புறுதி மற்றும் நட்ட ஈடுபோன்ற விடயங்களில் எவரும் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் விமான சேவையை நிறுத்திக் கொண்டுள்ள “லயன் எயார்” மற்றும் “மொனரா எயார்” நிறுவனங்கள் முன்பதிவு ஆசனங்களுக்காக கட்டணம் செலுத்தியவர்களுக்கு அப் பணத்தை மீளளிக்கும் நடவடிக்கையைக்கூட காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளன. இத்தகைய செயற்பாடுகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்ப துயரங்கள் குறித்து எவரும் கவலைப்படுவதாக இல்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

பான் ஆம் அமெரிக்காவின் விமான சேவையாகும். இந்த விபத்துக்கான காரணங்களை ஆய்வு செய்ததில் விமானத்தில் குண்டுவைக்கப்பட்டு அது வெடித்ததனாலேயே விபத்து ஏற்பட்டதென்பதையும் இக்குண்டை வைத்தவர்கள் லிபிய உளவுத்துறையைச்சார்ந்தவர்களென்றும், அப்டெல் பாசெற் அலி மெகாரியும் லமென்கலிபா பிமா ஆகியோரே இந்த நாசவேலையைச் செய்தவர்கள் என்றும் மூன்று ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டது. ஸ்கொட்லாந்து நீதிமன்றத்தில் இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விசாரணைக்காக லிபியா குற்றவாளிகளைத்தரவேண்டும் என அமெரிக்கா வற்புறுத்தியது. லிபியா இணங்காததால் ஐக்கிய நாடுகள் சபையில் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டு ஐ.நா சபையினால் அடுத்த ஆண்டே லிபியாவுக்கு எதிரான பொருளாதாரத்தடையும் விதிக்கப்பட்டது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிராக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென பல்வேறு பிராந்திய, சர்வதேச அரங்குகளிலும் ஐ.நா சபையிலும் நீண்ட காலமாகப் பேசப்பட்டுவந்தாலும் பயங்கரவாதத்திற்கான விளக்கம் அல்லது வரைவிலக்கணம் தொடர்பான கருத்துமுரண்பாடுகளின் விளைவாக பயங்கரவாதத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக ஒன் றுபட்ட கருத்துக்கள் உருவாக முடியவில்லையாயினும் பயணிகள் விமானங்களைக் கடத்துதல், விமானப்பயணிகளைப் பணயம்வைத்தல், பயணிகள் விமானத்தில் குண்டுவைத்தல் ஆகியவற்றுக்கு எதிரான விடயத்தில் ஒன்றுபட்ட கருத்து. 20ஆண்டுகளுக்கு முன்னரே உருவாகின.

இத்தகைய நடவடிக்கைகளுக்கெதிரான காத்திரமான எதிர் நடவடிக்கைகளைமேற் கொள்பவர்களைக் கைது செய்யவும்,. ஒப்படைக்கவுமென பல்வேறு நாடுகட்கிடையே இரு தரப்பு, பலதரப்பு ஒப்பந்தங்கள் நடைமுறையிலுள்ளன.

சர்வதேச சட்டப்படி பயணிகள் விமானத்தை பயங்கரவாத நடவடிக்கைகட்குட்படுத்துதல் கிரிமினல் குற்றம் என்பது ஐ.நா சபையினாலேயே அறிவிக்கப்பட்ட ஒன்றாகும்.

இவ்வகையில்தான் 10ஆண்டுகட்கு முன்னால் விமானத்தில் குண்டுவைத்து தனது பிரஜைகளைக் கொன்றதற்காக லிபியா மீது கடந்த ஆறு ஆண்டுகளாக பொருளாதாரத்தடையைச் செயற்படுத்தும் அளவுக்கு அமெரிக்கா உக்கிரமாகச் செயற்படுகிறது.

அமெரிக்காவின் தலைமைகள் மூன்று தடவைகள் மாறியும் இன்றும் குற்றவாளிகளைக் கைது செய்ய சர்வதேச ஆதரவுடன் அமெரிக்காவும், ஐ.நாவும் மும்முரமாகச் செயற்படுகின்றன.

லொக்கர் பீயின் பேரால் மத்தியகிழக்கில் அமெரிக்கா இன்னோர் தடவை யுத்த முனைப்பை உருவாக்குவதைத்தவிர்க்க ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் குற்றவாளிகளை ஒப்படைத்து யுத்த முனைப்புக்கான போக்குகளைத்தடுக்க நேரடியாகவே லிபியா சென்றிருக்கிறார்.

10ஆண்டுகட்கு முன்னால் அமெரிக்கா விமானத்தில் கொல்லப்பட்ட பயணிகட்காக இன்று வரை அமெரிக்கா கவனம் செலுத்துகிறது.

ஆனால் இரணைதீவில் “லயன் எயார்” விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு 58பேரும் கொல்லப்பட்டதற்காக நாம் என்ன செய்கிறோம்?

பான் ஆம் (Panam) விபத்துக்கு காரணத்தையும் சூத்திரதாரிகளையும் கண்டுபிடிக்க மூன்று வருடங்கள் பிடித்தன. ஆனால் “லயன் எயார்” விமானத்தை வீழ்த்துவோம் என அறிவித்து விட்டே புலிகள் வீழ்த்தினார்கள்.

ஆனாலும் எமது மக்களின் இனப்பற்று மிக்க பலர் (புத்திஜீவிகள் உட்பட) யார் செய்திருப்பார்கள், புலிகள் செய்யமாட்டார்களே, கடத்திக்காட்டில் வைத்திருப்பார்கள், தவறுதலாகத்தான் செய்திருப்பார்கள் இப்படி புலிகளைப் பாதுகாக்கும் வழியில் தான் சிந்தனை செய்தார்களே தவிர 58அப்பாவிப்பணிகள் என்ற மனிதாபிமான உணர்விலிருந்து கூடப்பார்க்கவில்லை.

தமிழ்ப்பத்திரிகைகள் இக்கொடுரத்தின் தீவிரத்தன்மையை மக்கள் மத்தியில் தணிப்பதற்கு சால்ஜாப்புக்களும், சப்பைக் கட்டுகளையும் எழுதி மனிதாபிமானத்துடன் சிந்திப்பது இனவிடுதலைக்கு நல்லதல்ல என்றே கோடிகாட்டின.

ஒருபடிமேலே போய் உண்மையைக்கண்டுபிடித்து வெளிப்படுத்தியவர்களை நையாண்டி செய்தது “தமிழ் பாராளுமன்ற உறுப்பினரை ஆசிரியராகக்கொண்ட தினமுரசு”. வீழ்த்தியவர்கள் புலிகள் இயக்கமே என்பதும் வீழ்த்தியவர் அருள் எனப்படும் 17வயதுப் புலி உறுப்பினர் என்பது தெரிந்தும் அதனைக்கண்டிக்க அல்லது அவர்களைத்தண்டிக்க நடவடிக்கை எடுக்கும்படி மக்களிடமோ, அரசிடமோ, சர்வதேச சமூகத்திடமோ கோர ஈ.பி.ஆர்.எல்.எவ் தவிர்ந்த வேறெந்த தமிழ்க்கட்சிக்கும் கூட திராணியோ பொறுப்புணர்வோ இருக்கவில்லை.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் புலிகளே காட்டுமிராண்டித்தனமாக இதனைச் செய்தார்கள்.

அவர்களது வானொலியில் பயணிகள் விமான விபத்து நடந்தவிடயம். செய்தியாகக் கூட

**எஸ்.கந்தையா**

ஒலிபரப்பவில்லை. யுத்தத்தில் கொல்லப்படும் இராணுவத்தின் உடல்களைக் கையளித்து கணக்குகளைச் சொல்லி உலகெல்லாம் விளம்பரப்படுத்தும்புலிகள் சொந்த மக்களின் ஒதுங்கிய சடலங்களைக்கூட உறவினர்களுக்கு காட்டாமலே புதைத்துதள்ளினர்.

புதைத்தது வெறும் மனித உடல்களை மாத்திரமல்ல மனிதாபிமானத்தையும் மனித நாகரீகத்தையும் தான் என்பது நேர்மையாகச் சிந்திப்பவர்களுக்குப் புரியும். ஆக தமிழ்மக்களுக்கு புலிகள் பொறுப்பாக இல்லை.

கொல்லப்பட்டவர்களில் 2விமானிகள் தவிர 56பேரும் இலங்கையர். தமது மக்கள் கொல்லப்பட்டதற்காக அரசாங்கம் நடவடிக்கை என்ன எடுத்தது? விமானத்தைக் காணவில்லை என தொலைக்காட்சியில் செய்தி கொடுத்தார்கள். விமானம் இயந்திரக்கோளாறில் வீழ்ந்ததா? நாசவேலை காரணமாக வீழ்ந்ததா? என்பதை உத்தியோகபூர்வமாகத்தெளிவுபடுத்தவே இல்லை.

அரச சார்பற்ற நிறுவனங்கள் நபர்களுடாக உண்மைகள் வெளிக்கொணரப்பட்ட பின்னர் கூட விமானத்தைக்கண்டு பிடிக்கவோ உடல்களைப் பெற்று உறவினரிடம் ஒப்படைக்கவோ அரசு முயற்சிக்கவே இல்லை.

தன்னால் முடியாவிட்டால் சர்வதேச ஆதரவுடன் உடனடியாகச் செயற்பட்டு உடல்களைப் பெற்றிருக்க முடியும். குற்றவாளிகளை சர்வதேச சமுகத்தில் அம்பலப்படுத்தி அவர்களைச் சாத்தியமான வழியிற் தண்டித்திருக்க முடியும்.

சர்வதேச சட்டத்தைப்பயன்படுத்தி குற்றவாளியைக் கைது செய்ய அழுத்தம் கொடுத்திருக்க முடியும். ஆனால் குறைந்தபட்ச மனிதாபிமான நடவடிக்கையான அனுதாபச் செய்தியைக்கூட அரசு வெளியிடவில்லை. ஆக அரசுக்கும் தமிழ்மக்கள் மீது பொறுப்பில்லை. எமக்கு யார் பொறுப்பு? 10ஆண்டுகளாக நியாயம் கோரும் லொக்கர் பீ எங்கே? 10நாட்களுக்கு மறக்கப் பட்ட (மறைக்கப்பட்ட) இரணை தீவு எங்கே?

# நிதி ஒதுக்கீடு நிராகரிப்பு மலை உச்சிகளில் சங்கடம்

தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டை ஐ.தே.க தடுத்து நிறுதியது. ஆம். பாராளுமன்றத்தில் தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் அப்



போது பிரசன்னமாயிருந்த ஐ.தே.க உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது.

பாராளுமன்றத்திலிருந்த வடகிழக்கைச் சேர்ந்த ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களே ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அண்மைக் காலமாக மலையக மக்கள் மத்தியில் உருவாகி வரும் விழிப்புணர்வு பலருக்கு பீதியைக் கிளப்பியுள்ளது.

மலையக மக்கள் கடந்த நூற்றியைம்பது வருடங்களுக்கு மேலாக பன்றிக் கொட்டகைகள் போன்ற லயன் அறைகளிலேயே வாழ்ந்துவருகிறார்கள். கல்வி, வீடமைப்பு, காணி வழங்குதல், மின்சார விநியோகம், போன்றவை பேரினவாத சக்திகளுக்கு உறுத்தலை ஏற்படுத்தும் விடயங்களாக மாறிவிட்டன.

இந்தப்பின்புலத்திலேயே மலையக மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளையும்நாம் கருத்திற்கெடுத்தாக வேண்டும்.

யுத்தத்திற்கான நிதி ஒதுக்கீடு களைவிட ஆக்கபூர்வமான இனசௌஜன்யத்துடனான வாழ்வுக்கு ஒதுக்கப்படும் நிதியே இங்கு சில சக்திகளின் கண்களை உறுத்துகிறது.

இதில் ஐ.தே.கவினரும்,ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள இனவாத சக்திகளும் கூட்டாகச் · செயற்பட்டுள்ளன என்றே கருதவேண்டியுள்ளது.

மலையகத்தின் புதிய தலைமுறையினர் மத்தியில் ஒரு ஆரோக்கியமான போக்கு தலைதூக்கியுள்ளது.

அதாவது கல்வி, தோட்டத் தொழிலாளரின் பிள்ளை தோட்டத் தொழிலாளியாகவே இருக்க வேண்டும் என்ற நிலை மாறி வருகிறது. புதிய தலைமுறையினர் வேறு தொழில்களில் ஈடுபடும் ஆர்வம் வளர்ந்து வருகிறது. அடிமை நிலைக்கு எதிராகத் தட்டிக் கேட்கும் நிலை உருவாகி வருகிறது.

இது மலையக மக்களின் பாமரத்தனத்தில் குளிர்காய்ந்த சக்திகளுக்கும் சினத்தை ஏற்படுத்துகிறது. அந்தச் சினத்தின் விளைவே குழுநிலை விவாதத்தில் தோட்ட உள்ளக்கட்டமைப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை ஐ.தே.க எதிர்த்த செயற்பாடாகும். அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகள் தொடர்பாகவும், ஐ.தே.க எதிர்க்கும் போக்கையே கடைப்பிடிக்கிறது.

இந்தப் பின்னணியில், ஐ.தே.க வன்னிக்கான பொருளாதாரத்தடை தொடர்பாகவும், யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை தொடர்பாகவும், முன்வைக்கும் கருத்துக்கள் உண்மையானவையா? இதயசுத்தியானவையா? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஐ.தே.க எதிர்த்திருந்தாலும் கூட தோட்ட உள்ளகக்கட்டமைப்பு அமைச்சுக்கான நிதி வேறு வழிகளில் ஒதுக்கப்படலாம். ஆனால்தாம் கொண்டு வந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாததா


தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

# பல்வேறு தரப்புக்கும் சம அந்தஸ்து தென்னாபிரிக்காவின் முன் உதாரணம்.

எஸ்.திருநாவுக்கரசு

தென்னாப்பிரிக்க அரசின் இலங்கை நிலவரங்களை அறிவதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழு யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துள்ளது. தவிர பாராளுமன்றத்திலுள்ள தமிழ், முஸ்லீம், மலையக அரசியற் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்தது.

ஜனாதிபதி சந்திரிகா, வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் கலந்துரையாடல்களை நடாத்தியது.



யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் ஆயர், மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், மற்றும் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தது.

அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்கு சென்றிருந்த ஜனாதிபதி பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு எதிராக அங்குள்ள இந்திய சமூகத்தவரால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பியக்கமும், தென்னாபிரிக்க அரசிடம் புலிகள் தொடர்பாக ஒரு மென்மையான போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்று உணரப்பட்டதாலும் திரும்பவும் கதிர்காமர் அவர்கள் விசேடமாக தென்னாப்பிரிகாவுக்கு அனுப்பப்பட்டார்.

பிரித்தானியாவில் பயங்கரவாதத்திற்கு எதிராக கொண்டுவரப்பட இருக்கும் விசேட சட்ட ஏற்பாடுகளும், பிரித்தானியாவில் புலிகளின் காரியாலயத்தை மூட வேண்டிய நிலை ஏற்படலாம், அடுத்து அவர்கள் தமது சர்வதேச தலைமைக்காரியாலத்தை தென்னாபிரிக்காவில் அமைக்கலாம் என்ற ஊகங்களும், வேறு சில அரசியல், இராணுவ ரீதியான காரணங்களும் கதிர்காமரின் விஜயத்திற்கு காரணமாக அமைந்தன.

புலிகளுக்கு ஆதரவளிப்பதால் தென்னாபிரிக்காவுக்கு சிக்கல்கள் உருவாகும் என கதிர்காமர் எச்சரித்திருந்தார். கதிர்காமர் தென்னாபிரிக்காவில் வெளிவிவகார அமைச்சர் மற்றும் அதிகாரிகள் சிலரைச் சந்தித்தார்.

அப்போதுதான் இலங்கைக்கு தென்னாபிரிக்கத் தூதுக்குழு ஒன்றை விஜயம் செய்யுமாறு அழைத்தார். அந்த அடிப்படையிலேயே இந்தத் தூதுக்குழு இங்கு வந்ததாகக் கருதப்படுகிறது.

இதனிடையே இங்கு பல்வேறு விதமான ஊகங்களும், ஊர்ஜிதமற்ற கதைகளும் பல்வேறு அரங்குகளில் கிளம்பியிருந்தன. புலிகளுக்கு எண்பதுகளின் முற்பகுதியிருந்து தென்னாபிரிக்க அரசியல் கட்சிகளான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இங்காதா கட்சிகளுடன் உறவு உண்டு எனப் பேசப்பட்டது.

இங்குள்ள கத்தோலிக்க மத குருவானவர் ஒருவர் தென்னாபிரிக்காவின் பிரபல போராட்டக்காரரும், மனித உரிமை வாதியுமான டெஸ்மன்ட் டுட்டுவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தார். எனவும் செய்திகள் வெளியாகின.

இவை தவிர சில மாதங்களுக்கு முன்னர் சிம்பாப்பேயிலிருந்து இலங்கைக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றி வந்த கப்பல் புலிகளின் கையில் சிக்கியதிலும் தென்னாபிரிக்கா உதவியிருக்கலாமெனக் கருதப்பட்டது.

தவிர, நீண்ட காலமாகவே தென்னாபிரிகாவில் புலிகளுக்கு முகாம்கள் இருப்பதாகவும் கூறப்பட்டது.

தென்னாபிரிகாவில் வாழும் ஒரு மில்லியன் இந்தியர்களில் கணிசமானவர்கள் தென்னிந்தியத் தமிழர்கள் இவர்களில் கணிசமானவர்கள் புலிகளின் ஆதரவாளர்களெனப்பேசப்பட்டது.

இந்தப் பின்னணியிலிருந்து உருவாகிய வெறுப்புணர்வுகளிலிருந்தே. சந்திரிகா அவர்கள், இலங்கையில் தமிழர்கள் பூர்வீகக் குடிகள் அல்ல என்ற கருத்தையும் அங்கு உள்ளூர் டெலிவிசன்காரர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வழங்கிய செய்தியில் குறிப்பிட்டிருக்கலாம்.

இவற்றிற்கு அப்பால், உலகளாவிய தேசிய இனப்பிரச்சினைகளைப் பற்றி அணிசேரா மாநாட்டில் பேசும் போது தென்னாபிரிகாவின் தலைவர் நெல்சன் மண்டேலா, அவர்கள் காஷ்மீர் மற்றும் இலங்கை விவகாரங்களையும் குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்சினையை அணிசேரா நாடுகளின் மாநாட்டில் எழுப்பியதற்காக இந்தியப் பிரதமர் வாஜ்பேய் அவர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தார். அது முற்று முழுதாக இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை என்று நேரடியாக உடனடியாகவே பதிலளித்தார்.

1960களின் முற்பகுதியிலிருந்து தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களின் விடுதலைக்காக கிளர்ச்சியில் ஈடுபட்டு 27வருடம் கொடுஞ்சிறையில் வாழ்ந்த நெல்சன் மண்டேலா அவர்கள் உலகின் தேசிய மற்றும் இன விவகாரங்களில் அக்கறை செலுத்துவது புரிந்து கொள்ளப்படக்கூடியதே.

ஆனால் எல்லா இடங்களிலும் போராட்டங்கள் ஒரே மாதிரியானவையோ, பரந்துபட்ட நோக்கங்களைக் கொண்டவையாகவோ இருக்கவில்லை. சில போராட்டங்கள் அந்தந்த நாடுகளின் சமூக-பொருளாதார கட்டமைப்பைச் சீர்குலைக்கும் சர்வதேச சக்திகளின் நோக்கங்களிலிருந்து செயற்படுத்தப்படுகிறது.

காஷ்மீர் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அந்த முரண்பாடுகளை கூர்மையாக்கிட முயல்வோர் இந்தியாவை சிதறடித்து சின்னாபின்னப் படுத்தி விடுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை அனுபவங்களையும், தென்னாபிரிக்க அனுபவங்களையும் ஒப்பிட்டால் தலைகீழான பெறுபேறுகளே கிடைக்கும்.

சூலு இங்காதா மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஆபிரிக்கத் தேசியகாங்கிரஸ், மற்றும் இங்காதா தேசியக்கட்சி என்பவற்றிற்கு இடையில் பாரிய முரண்பாடுகள் இருந்தும் ஒருவரையொருவர் உடல் மீதியின்றி அழிக்கும் அளவுக்கு ஜனநாயக விரோதப் போக்கை கொண்டிருக்கவில்லை.

மொசாம்பிக்கிலும், வேறு அண்டை ஆபிரிக்க நாடுகளிலும் தலைமைச்செயலகத்தையும் மற்றும் காரியாலயங்களையும் அமைத்துச் செயற்பட்ட தேசிய காங்கிரஸ், முழு ஆபிரிக்காவின் ஆதரவையும், உலகின் விடுதலைக்காகப் போராடும் நாடுகளின் ஆதரவையும் பெற்றிருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக தென்னாபிரிக்காவின் பரந்துபட்ட மக்களின் இயக்கமாக அது இருந்தது. தென்னாபிரிக்காவின் சாதாரண மனிதர்கள் பலர் வீதியில் இறங்கி நின்று போராடினார்கள்.

தென்னாபிரிக்கா நிறவெறி சிறுபான்மை அரசாங்கத்திற்கு எதிராக ஐ.நா பொருளாதாரத் தடை விதிக்குமளவுக்கு நிலமை சென்றது. கடைசியாக தென்னாபிரிக்கா சுதந்திரமான அரசை அமைக்கும்போது இங்காதா மக்கள் கட்சியின் தலைவர் புத்தலேசியுடன் உடன்பாடுகாண்பதிலும், தென்னாபிரிக்க சிறுபான்மையின வெள்ளையரின் உரிமைகளை அங்கீகரிப்பதிலும், மற்றும் இந்தியப் பிரசைகள் உட்பட பல்வேறு பகுதியினரை அரவணைத்துச் செல்வதிலும் முதிர்ச்சி காண்பிக்கப்பட்டது.

அது மனித குலத்தின் ஒரு பகுதியினர் மீது காட்டப்பட்ட நிறவேற்றுமைக்கு எதிராக போராடிய மாபெரும் விடுதலை இயக்கத்தலைவர்கள் நடந்துகொண்ட முறை. அந்த நாகரீகங்கள் எல்லாம் இங்கு காணக்கிடையாதது.

எமது அண்டை நாடான இந்தியாவின் தலைநகர் டெல்லியில் ஒரு முக்கியமான வீதி நெல்சன் மண்டேலா வீதி எனப் பெயரிடப்பட்டுள்ளது. அந்தளவுக்கு இந்தியர்களின் மனங்கவர்ந்த தலைவராகவும் அவர் இருந்தார்.

இத்தகைய நிலவரங்களுடன் எமது போராட்டத்தை ஒப்பிடும் போது துயரமே எஞ்சுகிறது. இங்கு முதலாவது விடயம், ஒற்றுமையின்மை, யாரையும் சகிக்காத போக்கு, என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும் தவிர யாருக்கும் ஜனநாயகமில்லை; யாருக்கும் சுதந்திரமில்லை; என்ற போக்குகளே மேலோங்கிக் காணப்படுகிறது.

தமிழர் இயக்கங்கள், அரசியல் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை, ஐக்கியம் இல்லை. இதற்குப் பதிலாக மற்றவர்களை தடை செய்தல், உடல் மீதியின்றி அழித்தல், என்பதே இங்கு விதியாகிப் போய் விட்டது.

பேச்சுவார்த்தை மேசைகளில் கூட நம்பகரமானவர்களாக நாணயமானவர்களாக நடந்து கொள்ளவில்லை.

தமிழர்களைப் போன்ற இன்னுமொரு சிறுபான்மையினரான முஸ்லிம் மக்கள் விடயத்தில் கூட அந்த நாகரீகம் கடைப்பிடிக்கப்படவில்லை. ஏறத்தாழ ஒரே விதமான பிரச்சனைகளை முகங்கொடுக்கும் சமூகங்களின் விடயத்தில் கூட சகிக்க முடியாத போக்குகளே கடைப்பிடிக்கப்பட்டன.

★ காத்தான்குடிப் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்ட போதும் சரி,

★ யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட போதும் சரி இங்கு காட்டுமிராண்டித்தனமே தலைதூக்கி நின்றது.

இந்த லட்சணத்தில் தென்னாபிரிக்காவில் விடுதலைப் போராட்டம் நடந்தது. நாங்களும் அது தான் என்று கூறுவதற்கு என்ன மிச்சமிருக்கிறது.

வேறுபட்ட இனக்குழுக்கள், பல்வேறின மக்கள் பிரிவினர், இவர்கள் எல்லோரையும் அரவணைத்துச் செல்வதில் தென்னாபிரிக்காவின் முன் மாதிரியை புலிகள் மாத்திரமல்ல அரசாங்கமும் படிக்க வேண்டும்.

ஏன் இந்த அரசினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளில் கூட பௌத்த மதத்திற்கே சிறப்பிடமளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அரசகருமமொழி என்ற விடயத்தை அமுல் படுத்துவதிலும் அலட்சிய மனோபாவமே காட்டப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை அரசு தொடர்பாக தென்னாபிரிக்கர்களுக்கிருக்கக்கூடிய அதிருப்தியின் பின்புலங்களையும் நாம்புரிந்து கொள்ளவேண்டும். கறுப்பின மக்களுக்கெதிராக வெள்ளை நிறவெறி ஆட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்ட இன ஒதுக்கல் சட்டங்களில் இருந்தே.

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் ஜே.ஆர். அரசினால் 1979ல் கொண்டுவரப்பட்டது. அந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு அட்சரம் பிசகாமல் பொதுஜன முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னரும் அமுல்படுத்தப்படுகிறது.

ஜே.ஆர். காலத்தில் தமிழ் மக்களை ஒடுக்குதற்கான இராணுவ, பொருளாதார உதவிகள் தென்னாபிரிக்க நிறவெறி அரசிடமிருந்து பெறப்பட்டன. கறுப்பின மக்களை அழிப்பதற்கு எவையெவை பாவிக்கப்பட்டனவோ, அவை தமிழ் மக்களுக்கெதிராகவும் பயன்படுத்தப்பட்டன.

இலங்கைக்கு வந்த பல்வேறு தரப்பினரையும் சந்தித்த தென்னாபிரிகத் தூதுக் குழு சில விடயங்களைத் தெரிவித்துள்ளது.

**அவை முக்கியமானவை.**

1. தமிழர் இயக்கங்கள், அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையின்மையே இன்றைய அவல நிலைக்கு காரணமென்பது.

2. நாம் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது பெரிதும் சிறியதுமான பல தென்னாபிரிக்க இயக்கங்கள் சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பேச்சுவார்த்தையில் பங்கு பற்றின.

3. இனப்பிரச்சினைத் தீர்வில் மத்தியஸ்தராகவோ, ஏற்பாட்டாளராகவோ பணிபுரியத் தயாராக இருக்கிறோம் என்று தென்னாபிரிக்கத் தூதுக்குழு தெரிவித்தது.

இவை, அவர்களின் அனுபவங்களும், நம்பிக்கைகளும் ஆகும். முதலிருவிடயங்களும் நடைபெற்றால் மூன்றாவது விடயம் ஒரு பிரச்சினையே அல்ல. ஒற்றுமை இருந்தால் மக்களின் ஆதரவை வென்றெடுக்கலாம். சர்வதேச ஆதரவை மீளக்கட்டி எழுப்பலாம். ஜனநாயகம் இருந்தால் மாறுபட்ட கருத்துக்களுடாக வளர்ச்சியடையலாம்.

மனித உரிமைகளை உறுதி செய்து கொள்ளலாம். இனப்பிரச்சினைத் தீர்விற்கான உறுதியான அழுத்தத்தைப் பிரயோகிக்கலாம். இல்லாமல் தற்போதைய போக்கு தொடர்வது சமூகத்தின் சுய அழிவுக்கே வழிவகுக்கும்.

**இலங்கை ஒரே நாடாக இருப்பதையே தென்னாபிரிக்கா விரும்புகின்றது. இனப்பிரச்சினையில் மூன்றாம் தரப்பு சக்தியொன்று தலையிடுவதை விரும்பவில்லை. அரசாங்கம் விரும்பினால் இனப்பிரச்சினையை சமாதானமாக தீர்த்து வைக்கும் ஏற்பாட்டாளராகப் பணிபுரிய ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தயாராகவுள்ளார். எனினும் அதற்காகப் பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளது ஒத்துழைப்பும் அவசியம்.**

# கண்ணீரால் கசியாத செம்மணி தண்ணீரில் மிதக்கிறது!

மழை பெய்து விட்டது. செம்மணியின் வயல் வெளிகள் தண்ணீரால் மூடப்பட்டுவிட்டது. மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக செம்மணிப் பகுதியில் இருப்பதாகக் கூறப்படும் புதைகுழிகள் தோண்டப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பான கண்ணீர்க்கதைகளின் முடிவு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையும் காலவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டதாக உள்ளது.

இந்த நிலையில் வடபகுதியில் படையினரால் கைதாகிய பின் காணாமற் போனவர்கள் பற்றி ஒரு மீள் பார்வை பொருத்தமானது. இந்த விவகாரத்தின் ஆரம்பம், ஜனநாயக ரீதியாக செயற்படும் தமிழ் அரசியல் சக்திகளின் பங்கு, கதாநாயகனாக மாறிய வில்லன், பேசாமல் பேசப்படும் அரசியல் என்பன பற்றி விளக்கமாக இங்கு அவதானிக்கலாம்.

**காணாமற் போனவர் கதையின் ஆரம்பம்**

வலிகாமம் பகுதியில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்த 1996ன் மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் படையினரால் கைது செய்யப்பட்டவர்களான பலரும் காணாமற் போனவர்களாயினர்.

மாணவர்கள், இளைஞர்கள், குடும்பத்தலைவர்கள் எனப் பல வகையினரும் உள்ளடங்கலாக நீதி விசாரணை எதுவுமற்றவர்களாக இருப்பிடம் தெரியாதவர்களாயினர்.

குடும்பத்தில் ஒருவரது இருப்பிடம் தெரியாமல் போவது எத்தகைய மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடும் என்பது வார்த்தைகளால் விபரிக்க முடியாதது.

பாசம், நேசம் என்ற உணர்ச்சிகளும், இரத்த உறவுகளின் துடிப்பும் வேதனையும் எவரையும் கண்கலங்கச் செய்யக்கூடியது. 1996ன் டிசம்பர் மாதத்திற்கு முன்பாக இவ்வாறு காணாமற் போனவர்களின் எண்ணிக்கை என்ன என்பது குறித்தும் முரண்பாடு உண்டு.

சுமார் 600 பேர் காணாமற் போயிருப்பதாக வடபகுதியில் கைதாகிக் காணாமற் போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கம் கூறுகிறது. எனினும் இந்தச் சங்கத்தின் பதிவேட்டில் 1990 முதல் 1995 வரையிலான காலப்பகுதிக்குள் காணாமற் போனவர்களான சிலரது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக 24.12.90ல் மண்டைதீவு கடற்பரப்பில் காணாமற் போன ஜோசப் தனிநாயகம், 12.09.95ல் தெல்லிப்பழை பகுதியில் காணாமற்போன ஒய்வுதியரான வைத்திலிங்கம் தங்கமுத்து போன்ற பலரது பெயர்கள் இப்பட்டியலில் காணப்படுகின்றது.

எனவே வடபகுதியில் படையினரால் கைதாகிக் காணாமற் போனவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள 377பேரும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் தான் காணாமற் போனவர்களாக கருதப்படுதல் பொருத்தமற்றதாகிறது.

**தமிழ் அரசியல் கட்சிகள்**

1996ன் மே மாதம் முதல் வலிகாமம் பகுதியில் மக்கள் மீள க்குடியமர்தல் ஆரம்பமான போதும் 1997ன் ஜனவரி மாதத்திற்கு பின்னரே தமிழ் அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் அலுவலகங்களைத் திறந்து செயற்பாடுகளை ஆரம்பித்தன. முதலில்

**செல்வா**

அலுவலகத்தை திறந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) காணாமற் போனவர்கள் தொடர்பாக கவனம் செலுத்தியது.

படையினரால் கைதாகி காணாமற் போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை ஒருங்கிணைந்து ஒரு சங்கம் உருவாக்கப்பட்டது.

படையினரின் அத்துமீறலான செயற்பாடுகளை கண்டித்து உரத்துக்குரல் குரல் எழுப்பும் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக 1997 ஜனவரிக்குப் பின்னர் படையினரால் கைதாகிய பின்னர் காணாமற் போனவர்கள் தொகை வெகுவாகக் குறைந்தது.

படையினரால் கைதாகுபவர்கள் பற்றி விபரங்கள் உறவினர்களுக்கு அறிவிக்கப்படும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அத்துடன் மேஜர் ஜெனரல் பந்துல குலதுங்க தலைமையிலான இராணுவ விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாகவும், புனித யுவானியார் கோவிலுக்கு முன்பாகவும் அடையாள உண்ணாவிரதங்களும், ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பான குரல் மேலேழுப்பப்பட்டது.

இத்தகைய செயற்பாடுகளில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) என்பன காத்திரமான பங்களிப்பை நல்கியிருந்தன. ஈ.பி.டி.பியினரும் ஆதரவு காட்டினர்.

இவை கைதான பின்காணாமற் போனவர்களின் கதி என்ன என்ற கேள்வியை எழுப்பியிருந்தது. குடாநாட்டுக்குள் மட்டுமன்றிவவுனியாவிலும், கிழக்குமாகாணத்திலும் இத்தகைய அடையாள உண்ணா விரதங்கள் மேற்கொள்ளப்பட்டன.




தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்கொழும்பில் பாராளுமன்றத்திற்கு முன்பாகவும் ஒரு உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்துநடாத்தியது.

**எடுத்துரைக்காத உண்மை**

இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் காணமற் போனதாக கருதப்பட்ட பலரும் திரும்பி வரமுடியாத இடத்திற்கே சென்று விட்டனர் என்ற கசப்பான உண்மை பலருக்கும் மெல்லக்கசிந்தே இருந்தது.

எனினும் இந்த உண்மையை வெளிப்படையாக எடுத்துணர்த்திவிடும் துணிவு எவருக்கும் இருக்கவில்லை. இதனால் எங்காவது ஒரு சிறைக்கூடத்தில் தமது இரத்த உறவு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையே மக்களுக்கு தொற்றவைக்கப்பட்டிருந்தது. இதன் அதி உயர் கட்டம் அலரிமாளிகைச் சந்திப்புவரைதொடர்ந்தது.



1997ன் டிசம்பர் மாதத்தில் காணமற் போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் சிலர், ஈ.பி.டி.பியினரால் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வுடன் சந்திப்பும் மேற்கொள்ளப்பட்டது.

அந்தச் சந்திப்பின் போது விசாரணைக் குழு அமைக்கப்படும், காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் முடுக்கி விடப்படும் என்ற வகையிலேயே வாக்குறுதிகள் பெறப்பட்டன.

ஆனால் இத்தகைய விசாரணைக் குழு எதுவும் இதுவரையில் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கதாநாயகனாகிய வில்லன்**

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி, அவரது தாயார் மற்றும் அயலவர்கள் சித்திரவதைக்கும், கொலைக்கும் உள்ளாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு கொழும்பு நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு வந்தது. இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட முதலாவது எதிரியான சோமரத்ன ராஜபக்ஷா நீதிமன்றத்தில் வெளியிட்ட வாக்குமூலத்தின் மூலமாக கதாநாயகனாகினார்.

அவரது வாக்குமூலத்தில் வடபகுதியில் படையினரால் கைதான பின் காணாமற்போன பலரும் கொல்லப்பட்டு செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டதாக திடுக்கிடும் தகவல் வெளியிட்டார்.

இந்தப் பகிரங்க வாக்குமூலம் பெறப்பட்டமை, நீதிமன்றச் செயற்பாடுகளின் ஊடாகவே. அரசியல் நடவடிக்கைகளின் மூலமாக காணாமற் போனவர்கள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டு வந்த நிலைமையில் இந்த வாக்குமூலம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது உண்மையே.

காணாமற் போனவர்கள் தொடர்பாக அரசியலரங்கில் அக்கறை காட்டாமலிருந்த பலரும் கூட செம்மணிப் புதைகுழி விடயம் அம்பலமானதைத் தொடர்ந்து உணர்ச்சி வசப்படலாயினர்.

**சிறீலங்காவின் படையினர் மண்ணுக்கு அந்நியமான ஆக்கிரமிப்பாளர்கள் என்ற உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் களமாக செம்மணி விடயத்தை அரசியலாக்கினர்.**

சூரியகந்தைக்கும்–செம்மணிக்கும் இடையிலான வேறுபாடுகளில் முக்கியமான ஒரு அம்சம் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

சூரியகந்தையில் புதைகுழி விவகாரம் அம்பலத்திற்கு வந்த போது படையினரைவிட ஆட்சியிலிருந்தவர்களே மக்கள் முன் குற்றவாளிகளாக காட்டப்பட்டனர்.

செம்மணி விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஆட்சியிலிருப்பவர்களை விடப் படையினரே குற்றவாளிகளாக குறிக்கப்பட்டனர். சர்வோதயாவின் தலைவர் ஏ.ரி. ஆரியரத்ன யாழ்ப்பாணம் வந்திருந்த போது அவரிடம் காணாமற் போனவர்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கையில் கூறப்பட்ட பதில் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"ஜே.வி.பியினரின் கிளர்ச்சிக் காலத்தில் தென்னிலங்கையில் சுமார் 60.000க்கும் மேலானவர்கள் காணாமற் போயுள்ளனர். இங்கு சுமார் 600க்கும் குறைவு தானே" என்பது அவரது கூற்று. இது தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதல்ல என்பது வெளிப்படை எனினும் படையினருக்கு எதிரான செயற்பாடுகள் நீடிக்கும் யுத்த நிலைமையில் காணாமற் போவது, கைதாகிச் சித்திரவதைக்குள்ளாவது போன்றனவும் இடம் பெறுவதை எவராலும் முற்றாக தடுத்துவிட முடியாது என்பதும் எண்ணிப் பார்க்க வேண்டியதே

நீதிமன்றத்தில் சோமரத்ன ராஜபக்ஷாவின் வாக்குமூலம் வெளியானதை தொடர்ந்து, செம்மணி புதைகுழி விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. புதைகுழிகள் சர்வதேச ரீதியில் நிபுணத்துவம் பெற்றவர்களின் உதவியுடன் தோண்டப்பட வேண்டுமென்ற அழுத்தம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஏற்படுத்தப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவும் மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை தோன்றி அக்டோபர் முதல் வாரத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுப் பிரதிநிதிகளில் ஒருவரான நீதிபதி ரி. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்தைச் சீர் குலைத்ததாக "லயன் எயார்" விமானம் இரணைதீவுக் கடற்பகுதியில் சுட்டுவிழ்த்தப்பட்டது. போக்குவரத்தில் ஏற்பட்ட தடை, பாதுகாப்புக் காரணங்கள் எனப்பல சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு செம்மணிப் புதைகுழி தோண்டப்படுவது காலவரம்பின்றி நீடிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள உறவினர்கள் வடிக்கும் இரத்தக் கண்ணீரை எவர் தான் துடைக்க முன்வரக்கூடும். என்பதுவே இப்போதுள்ள கேள்வி?

இதே வேளை செம்மணியில் புதைகுழி தோண்டப்பட வேண்டும் என்று அதீத அக்கறையுடன் குரலெழுப்பும் பலரும், லயன் எயார் விமானத்தில் பயணித்து உயிரிழந்தவர்களின் கதை குறித்தும், தடுப்புக்காவலில் வாடும் சுமார் அறுநூறுக்கும் அதிகமானவர்கள் குறித்தும் அசாதாரண மான மௌனம் சாதிப்பது புரிந்து கொள்ளச் சிரமமானதாகும்.

# எந்தையை இழந்தும்........

## இலை மறைகாய்

உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, சாகசச் செயல்களில் ஈடுபடுவதற்காக இயக்கத்தில் இணைந்து கொண்டவனல்ல அவன். இனப்பிரச்சினையின் பாதிப்புக்கள் குறித்து உணர்வுபூர்வமாகப் புரிந்து கொண்டதுடன், சமூகத்தில் நிலவிவரும் பல்வேறு சமூக-பொருளாதார குறைபாடுகளும் அடக்கு முறைகளும் களையப்படவேண்டும் என்ற ஆவலோடு சமத்துவ சமதர்ம சமூக அமைப்பை கட்டியெழுப்ப தன்னாலான பங்களிப்பையும் நல்க முன்வந்த பலரில் ஒருவன். இந்த வகையில் எழுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் தன்னையும் இணைத்துக்கொண்டான்.

அப்போது அவன் மாணவனாக இருந்த காலம். ஈழ மாணவர் பொது மன்றம் என்ற அமைப்பின் ஒரு அங்கத்தவனாக இணைந்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திடவும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக மாணவர்களை அரசியல் மயப்படுத்திடவும் அவனும் பாடுபட்டான்.

குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளுக்கும் சென்று மாணவர்களைச் சந்தித்ததுடன் தனது கிராமத்திலும், சுற்றயல் கிராமங்களிலும் வாழ்ந்த நண்பர்களை தோழர்களாக்கிக் கொண்டான். சாதி அமைப்பின் வேலிகள் அவனுக்கு ஒரு தடையாக இருக்கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் அறிமுகமாக்கப்பட்ட காலம் அது. வணக்கத்திற்குரிய பிதாக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் அப்பாவி இளைஞர்கள் பலரும் அடுத்தடுத்துக் கைதாகி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட வேளை. இவற்றைக் கண்டிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் பல்வேறு எதிர்ப்பியக்கங்கள் நடைபெற்றன.

ஈழ மாணவர் பொது மன்றமும் (Gues) ஒரு நீண்ட பாத யாத்திரையை ஒழுங்கு செய்தது. 1982ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ். பெரிய கோவிலின் முன் இந்தப் பாத யாத்திரை ஆரம்பமானது. ஆரம்ப இடத்திற்கு அருகாமையிலேயே பொலீசார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். யாத்திரையில் பங்கேற்ற பலரும் வீதியிலேயே அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இந்தப் பாதயாத்திரைக்கு மட்டக்களப்பு, திருமலை மற்றும் மலையகத்திலிருந்தும் பலர் வருகை தந்திருந்தனர். குடாநாட்டின் பல்வேறு கிராமங்களிலிருந்தும் மக்கள் பங்குபற்றுவதில் அவன் தீவிரமான பங்களிப்பை நல்கியிருந்தான்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக்குடாநாட்டில் மக்கள் விடுதலைப்படை என்ற இராணுவ அமைப்பைக் கட்டும் வேலைகள் தோழர் பத்மநாபாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் மத்தியில் செயற்பட்டு அவர்களது அடிமன உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் முகமாக செம்மண் பிரதேசத்தின் விவசாயிகளுடன் விவசாயிகளாக இணைந்தும், பாடுபட்டான். கிராமியப் பாதுகாப்புக் குழுக்களை கட்டுவது, படைக்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பது, கட்சிக்கான நிதி ஆதாரங்களைத் தேடுவது போன்ற பல்வேறு பணிகளிலும் கடமைப் பொறுப்புடன் ஈடுபட்ட பலரில் ஒருவனாக அவனும் இருந்தான்.

மக்களின் விடுதலைக்கான படையணி என்பது அரசாங்க இராணுவம் போல செயற்பட முடியாது. அரசியல் ரீதியான வழிகாட்டலுடன், பொதுமக்களின் நலன்களுக்காகவே செயற்படுகிறோம் என்ற நம்பிக்கையை வளர்ப்பதிலேயே மக்கள் விடுதலைப் படையின் அத்திவாரம் தங்கியுள்ளது. அந்த வகையில் இயக்கத்தை நாடிவரும் ஒவ்வொருவரையும் அரசியல் ரீதியாக வழிநடத்த வேண்டியிருந்தது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களான வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்தவர்களான பெருமளவானோர் இயக்கத்தினுள் உள்வாங்கப்பட்டனர். ஸ்தாபனத்தின் வர்க்க இயல்பு அந்த வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்களை உள்வாங்குவதாலேயே பாதுகாக்கப்பட முடியும் எனவும் திடமான நம்பப்பட்டது. பரந்த வெகுசன இயக்கமும் அதற்கான படை அமைப்பும் என்பதே இங்கு நோக்கமாக இருந்தது.

உணர்ச்சிகளால் உந்தப்பட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுக் கவர்ச்சி காட்டும் வீரச் செயல்களை மட்டுமே தமது அரசியல் மூலதனமாக பயன்படுத்திய புலிகள் போன்ற அமைப்புக்களின் செயற்பாட்டிற்கு இது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அக் காலத்தில் புலனாய்வு பொலீசார் மீதான தாக்குதல்கள், வங்கிக் கொள்ளைகள், பொலீஸ் நிலையங்கள் மீதானதாக்குதல்கள் போன்றவையே பிரமாதமாகப் பேசப்பட்டன என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இத்தகைய சூழ்நிலையில், இளைஞர்களை அரசியல் பாசறைகளில் பயிற்றுவிப்பதில் அவன் ஒரு உதாரணமான வழிகாட்டியாக இருந்தான். பேரினவாத ஒடுக்குமுறையில் கொடூரம் மிகுந்த அக்காலத்தில் மனிதாபிமான பணிகளில் ஈடுபடுவதிலும், மக்களுக்கு உதவிகரமான நடவடிக்கைகளில் பங்கேற்பதிலும் அவன் முன்னின்றான்.

மானிடநேயம் மிகுந்தவரான கியூபாவின் புரட்சியாளர் சேகுவேரா ஒரு போராளி அன்பினால் வழி நடத்தப்பட வேண்டும் என்றே போதிக்கினார். உற்ற தோழர்கள் உதிரம் சொரிந்த போதெல்லாம் சோகம் நெஞ்சைக் கவ்வினாலும் உறுதி குலையாதவராக அடுத்த நடவடிக்கையைத் தொடரவேண்டியிருந்தது.

1985ன் முற்பகுதியில் படையினர் குடாநாட்டில் உலாவருவது வாடிக்கையான விடயம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளையில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கிக் கொள்ள நேரிட்டது. கூட வந்தவர் உயிர்துறக்க நேரிட்ட போது அவன் கைதானான். உடனடியாகவே சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொள்ளாமல் படையினரின் சித்திரவதைகளுக்கு முகம் கொடுத்தான்.

படையினரின் சித்திரவதைக்கூடம் உண்மையில் ஒரு பரிசோதனைக்களமாகும். செக்கோ செலவாக்கியப் போராளியான யூலியஸ் பூசிக் ஜேர்மன் பாசிஸ்டுகளின் சிறையிலிருந்த போதுதான் தூக்குமேடைக் குறிப்புக்களை எழுதினான். ஒரு சில அடிகள் விழுவதற்கு முன்பாகவே எல்லாவற்றையும் காட்டிக்கொடுத்துவிடும் பலவீனம் பற்றியும், தமக்குத் தெரிந்த அனைத்தையும் உளறிவிடும் பண்பு பற்றியும் அவன் அதில் குறிப்பிட்டிருந்தான். பல போர்க்களங்களில் முன்னணியில் நின்றவர்கள் கூட இந்த இடத்தில் துரோக மிழைத்துவிட்ட அனுபவம் எமது போராட்ட அரங்கிலும் பல இடங்களில் உண்டு. கைகளில் சங்கிலிகள் பிணைக்கப்பட்டு தினசரி சித்திரவதைகளை அனுபவித்து யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு முகாமுக்கும் ஏற்றி இறக்கப்பட்ட அவன், இறுதியாக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டான்.

அரசியல் கைதிகளின் உரிமைகளுக்காகவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், கைதிகளின் அன்றாடத்தேவைகளுக்காகவும் பல தடவை குரல் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. உண்ணாவிரதங்கள் எனவும், சாகும்வரையிலான உண்ணாவிரதம் எனவும் உரத்த குரல் எழுப்பும் ஒவ்வொரு முயற்சியிலும் அவனுக்கும் பங்கு இருந்தது.

1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி பொதுமன்னிப்பு வழங்கிய சூழலில் அவனும் சிறைக்கம்பிகளைக் கடந்து வெளியே வந்தான். "அப்பாடா விடுபட்டோம்" "தப்பித்தோம்" இனிப் பொது வாழ்வு வேண்டாம் என்று ஒதுங்கிக் கொள்ளாமல், நாட்டை விட்டுத் தப்பி ஓடும் வழி தேடாமல் தொடர்ந்தும் சமூகத்திற்கான பங்களிப்பை நல்கும் பாதையைத் தேடினான்.

இந்த வகையில் தோழர்களை நாடிச் சென்றான். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாமென நம்பினான். அதனை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும்பங்குவகித்தான். இதனால் புலிகள் பார்வையில் சிக்கிக்கொள்ள நேரிட்டது இவனது குடும்பம். ஊரில் அமைதியாக குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த இவனது தந்தையை தனயனுக்காகப் பலிகொண்டனர் புலிகள். அத்துடன் தாயாரும் ஊரில் குடியிருக்க முடியாதளவுக்கு தள்ளப்பட்டார். பொதுநலம் கருதி உழைத்ததும், சுயநலம் மறந்து செற்பட்டதும் தேசத் துரோகமாக சித்தரித்துக் காட்டப்பட்டது.

ஒரு சில மாதங்கள் ஆயுதப் பயிற்சி பெறுவதனாலோ, அல்லது ஒரு சில படையினரைத் தாக்கி அழிப்பதாலோ, அல்லது தனது உயிரைத் துச்சமாக கருதிக்கொள்வதாலோ, ஒருவர் போராளியாகிவிட முடியாது. சமூகத்தின் மீது உண்மையான பற்றும், தொடர்ச்சியான பங்களிப்பும், தனிமனித நலன்களைவிட பொதுநலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் பண்புகளுமே எதிர்காலத்திற்கு வழிநடத்தத்தேவையானவையாகும்.

---

# மாவீரர் தின உரை சமாதானத்திற்கான அழைப்பா? போருக்கான அறைகூவலா?

பலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட செய்திகளில் ஒன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை. உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்பாகவே சமாதானப் பேச்சுக்கள் குறித்த சமிக்ஞைகள் இதில் உள்ளடக்கப்பட்டு இருக்கும் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

உரை வெளியிடப்பட்ட பின்பு சமாதானத்திற்கான பச்சைக் கொடி காட்டப்பட்டிருப்பதாகவே தொடர்பு சாதனங்கள் பலவும் கருத்துக்கள் பரப்பி வருகின்றன.

இந்த நிலையில் மாவீரர் தின உரையை வரிக்கு வரி வாசிக்கும் எவரும் சமாதானத்திற்கான சமிக்ஞையை விடவும், போர் தொடருமென்பதற்கான பிரகடனங்களே அதிகம் இருப்பதையே புரிந்து கொள்ள முடியும்.

### முன் நிபந்தனை

"சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதான்ப் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கின்றோம்" என்று ஒரு வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மைதான்.

"ஆனால் சமாதானப் பேச்சுக்கு அரசு விதிக்கும் முன் நிபந்தனைகளை ஏற்கத்தயாராக இல்லை" என அடுத்த வரியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளதுடன், "போர் ஓய்ந்த நிலையில், இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் நீங்கிய சூழ்நிலையில் அரசியற் பேச்சுக்கள் நடைபெறுவதையே நாம் விரும்புகி றோம்" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் அரசாங்கம் விதிக்கும் முன்நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும், புலிகள் எத்தகைய சூழ்நிலையில் பேச விரும்புகிறார்கள் என்பதும் புலப்படுத்தப்பட்டு உள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார வாழ்வு மீது தடைகளும் அரசியல் அழுத்தங்களாகப் பிரயோகிக்கப்படும் நிலையில் சமத்துவமான நிலையிலிருந்து பேச்சுக்கள் நடத்தப்பட முடியாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அழுத்தங்களை நீக்குவது பற்றியும், அரசியற் பேச்சுக்கான அடிப்படைகளை வகுப்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்கவும் தயாராக இருக்கின்றோம் என்ற நிலைப்பாடானது எந்தளவுக்கு சமாதானத்திற்கான சமிக்ஞையாகக் கொள்ளப்படலாம் என்பது கேள்விக் குரியது.

### அரசாங்க நிர்வாகம்

"போரினால் ஆக்கிரமித்த பகுதிகளில் அரச நிர்வாகத்தை நிறுவும் சந்திரிகாவின் அரசியல் நோக்கமும் தோல்வியையே சந்தித்து வருகிறது" எனத் தொடங்கும் பகுதியில் கைப்பொம்மைகளான தமிழ்க்குழுக்களின் ஆதரவோடு அரச நிர்வாகம் நடத்தவும் நாம் இடமளிக்கப்போவதில்லை எனவும், எத்தனை காலமானாலும் எமது தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தில் கூட ஆக்கிர மிப்பாளர்கள் நிலை கொண்டு நிற்பதை அனுமதிக்கப் போவதில்லை எனவும், பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், போக்குவரத்து சேவைகள், என்றவாறாக விரியும் அரசாங்க நிர்வாகம் எதுவும் தமிழர் தாயகப் பகுதியெனக் கூறப்படும் பிரதேசத்தில் செயலிழந்து போகவேண்டும் என்ற கருத்து இப்பகுதியில் இப்போதும் வாழும் மக்களுக்கு வேப்பங்காயாக இருக்கும் என்பது வெள்ளிடைமலை.

மேலும் யாழ்ப்பாணக்குடாநாடு இப்போதும் வெறுமனே இராணுவத்தினரின் முகாம்களாக மட்டுமில்லை. சுமார் நான்கு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பிரதேசம். இங்கு அத்தியாவசிய சேவைகளை சீர்குலைத்து மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கச் செய்வதனால் அரசியல் லாபம் பெறமுற்படும் நிலமை புலிகளுக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும்.

### நம்பிக்கையீனம்

இரத்தக்கறை படிந்த ஒரு அத்தியாயத்தின் கதாநாயகியாக விளங்கும் சந்திரிகா, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி அமைதி வழியில் தமிழரின் தேசிய பிரச்சினையை தீர்த்து வைப்பார். என நாம் நம்பவில்லை என்பது தெட்டத்தெளிவாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அரசியற் பிரச்சினைக்கு தீர்வு காணும் கனவுலகில் வாழ்பவர் என்றும், சிங்களப் பேரினவாத சித்தாந்தத்திற்குள் சிறைப்பட்டுக்கிடக்கிறார் என்றும் விபரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் உண்மைத் தன்மைக்கு அப்பால் சமாதானத்திற்கான அவாவை இந்த விபரணங்கள் வெளிப்படுத்திவிடவில்லை. இத்தகைய தலைமை தமிழர் மீது கருணைகொண்டு தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்குமென எதிர்பார்க்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளதன் மூலம் போரைத் தொடர்ந்து முன்னெடுக்கும் முனைப்புக்களிலிருந்து தாம் பின்வாங்கப் போவதில்லை என்பதுவே தெளிவாக்கப்பட்டுள்ளது.

வற்றிப் போய்க்கிடந்த ஆயுதக்களஞ்சியங்கள் பெருமளவில் நிரம்பிப் போயுள்ளது என்பதன் வாயிலாக போரைத் தொடர்வதற்காக இளைஞர்கள் படையணிகளில் இணைய வேண்டுமென்ற விருப்பமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே பிரபாகரனின் மாவீரர் தின உரையானது உள்ளடக்கத்தில் சமாதானத்திற்கான அழைப்பை விடவும், போருக்கான அறைகூவலே அதிகமாகவுள்ளது என்பது வெளிப்படை.

இராணுவத்தினரின் பிரசன்னத்தை ஆக்கிரமிப்பாகக்கருதும் போக்கும், ஏனைய அரசியற் சக்திகளுக்கான ஜனநாயக உரிமைகளை அங்கீகரிக்காமை, அடிப்படை நம்பிக்கையீனம், என்பவற்றை வெளிப்படுத்தியிருக்கும் இந்த உரையில் சிறைச்சாலைகளில் வாடுபவர்கள் குறித்தோ, சந்தேகப் பார்வைகளால் துளைத்தெடுக்கப்படும் அவலம் தமிழ் மக்களுக்கு வாய்த்துள்ளமை பற்றியோ எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை.

இதனாலேயே ஒரு காலத்தில் புலிகளின் தலைவருக்கு மிக நெருக்கம்ானவர் எனக் கருதப்பட்ட இந்து பத்திரிகையின் ராம் கூட, பிரபாகரனின் உரையில் சாதகமான அம்சங்கள் வெகு குறைவு என்று விமர்சிக்க நேர்ந்துள்ளது.

எனினும் பிரபாகரன் சமாதானத்திற்கு தயாராகவுள்ளார் என்றவாறாக பரப்பப்படும் கருத்துக்களும் ஒரு வகையில் புலிகளின் மீதான அரசியல் அழுத்த மாகவே உருமாறி வருவது கண்கூடு.

# மக்கள் உங்களிடம் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

## பிரபாகரனுக்கோர் திறந்த மடல்!



அன்புடன் புலிப்படைத் தலைவர் அவர்கட்கு,

நவம்பர் 27ம் திகதி மாவீரர் தினத்தின் போது தாங்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையை ஆவலுடன் செவிமடுத்தவர்களில் நானும் ஒருவன். சகல பத்திரிகைகளும் கூட உங்கள் உரைக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன.

உங்களது 20நிமிட உரையில் நீங்கள் பல விடயங்களை குறிப்பிட்டிருந்த போதும் கூட,முன் நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைக்கு நீங்கள் தயாராக இருப்பதாக கூறிய விடயமே தொடர்பு சாதனங்களில் அதி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது மக்களுக்கு சமாதானத்தின் மீதுள்ள அக்கறையையே துலாம்பரமாக வெளிக்காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை.

இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, குண்டு வீச்சுக்கள், அழிவுகள், மரணங்கள் என மக்களின் கஷ்ரங்களை மிகவும் துல்லியமாக நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதையும், இக்கொடிய யுத்தத்தால் எட்டரை இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாகி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள் என்பதையும் உங்கள் உரையில் மிகவும் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளீர்கள்.

எனவே யுத்தம் என்பது மக்களை எவ்வளவு தூரம் துன்பத்திற்குள்ளாக்குகின்றது என்பதை நான் எழுதித்தான் தெரிய வேண்டுமென்பதல்ல.

ஆனால் இவ்வளவு துன்பங்களுக்கும், அரசாங்கம் எவ்வளவு காரணமோ, அதேயளவுக்கு யுத்தம் புரிபவர்கள் என்ற அடிப்படையில் நீங்களும் இத்துன்பங்களுக்கு காரணகர்த்தவாகின்றீர்கள் என்பதை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

உங்களது யுத்தம் விடுதலைக்கான யுத்தம், அரசாங்கத்தின் யுத்தம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான யுத்தம் என நீங்கள் நியாயப்படுத்தக்கூடும். அதில் உண்மையுமிருக்கலாம். ஆனால் யுத்த அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக நீங்களும் காரணகர்த்தாக்களாக இருக்கின்றீர்கள் என்பதுதானே யதார்த்தமானது.

விடுதலைக்காக யுத்தம் புரிவது தவறல்ல. ஆனால் யதார்த்த சூழ்நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு, பூகோள அரசியல் நிலைகளைப் புரிந்து கொள்ளாமல், “விடுதலைக்கான யுத்தம்” என்ற பாசாங்கில் நாம் எவ்வளவு காலத்துக்குத்தான் யுத்தத்தை தொடர முடியும்.

15வருட யுத்தத்தில் எட்டரை இலட்சம் மக்கள் அகதிகளாக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தால் இன்னும் ஐந்தோ பத்தோ வருடங்களுக்கு யுத்தம் தொடர்ந்தால் இன்னும் எத்தனை இலட்சம் மக்கள் வெளியேறுவார்கள் என்பதை சற்று கற்பனை பண்ணிப்பாருங்கள்.

அது மாத்திரமல்ல கடந்த பதினைந்து வருடகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அடைந்த வெற்றிகளையும் தோல்விகளையும் சீர் தூக்கிப் பாருங்கள். போராளிகளுக்கு அப்பால், எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். எவ்வளவு பிரதேசங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாத்திரம் 90,000 வீடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ அழிந்துள்ளது. வன்னியில், இராணுவம் பிடிக்குமிடமெல்லாமே தரைமட்டமாகின்றது.

கிழக்கில் எவ்வளவு பிரதேசங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எத்தனை ஆயிரம் விதவைகள், எத்தனை ஆயிரம் அநாதைகள், எத்தனை ஆயிரம் அங்கவீனர்கள். கல்வி, சுகாதாரம் போன்றவை எவ்வளவு தூரம் சீரழிந்துள்ளன.

2000ம் ஆண்டில் காலடி வைக்கப் போகின்றோம். உலகமே பாரியமாற்றத்துக்குள்ளாகிவருகின்றதென நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் வடக்கு கிழக்கில் மின்சாரம் இல்லை, கம்பியூட்டர் கல்வி இல்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் எப்படித்தான்-இந்த உலகத்துடன் போட்டி போடுவது? இவையெல்லாம் எமது இழப்புகள் இல்லையா? யுத்தம் தொடர்ந்தால் இவ்விழப்புக்கள் இன்னும் எத்தனைபடி உயரும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இவற்றைக் கருத்தில் கொண்டுதான் முழுத்தமிழ்மக்களும் சமாதானம், சமாதானம் என்று குரல் கொடுக்கின்றார்கள்.

மக்களின் நிலையை புரிந்து கொண்ட பத்திரிகைகளும், நீங்கள் ஆற்றிய உரையில் மக்களுக்குத் தேவையான சமாதானத்திற்கான பகுதியை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளன.

ஆனால் இலங்கை அரசியலையும், தமிழரின் போராட்டத்தையும் உன்னிப்பாக கவனித்து வரும் ஒருவன் என்ற வகையில், பேச்சுவார்த்தைக்கான உங்கள் அழைப்பில் போலித்தனம் தான் மேலோங்கி உள்ளதே தவிர, பேச்சுவார்த்தையில் நீங்கள் கொண்டுள்ள அக்கறையையோ ஆர்வத்தையோ உங்கள் உரையில் காணமுடியவில்லை.

அரசின் தரப்பில் எந்தவித முன் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாதென கூறும் நீங்கள், உங்கள தரப்பில் பல முன் நிபந்தனைகளை விதித்துள்ளதானது, பேச்சுவார்த்தை மீது உங்களுக்குள்ள ஆர்வத்தை கேள்விக்குரியதாக்கினறது.

அதுமாத்திரமல்லாமல், கடந்த கால மாவீரர் உரைகளுக்கும், இன்றைய மாவீரர் தின உரைக்குமிடையில் கருத்து ரீதியாக பாரிய மாற்றங்கள் இருப்பதாகத் தோன்ற வில்லை.

ஆனால் மக்கள் உங்களிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். யுத்தத்துக்கு, அழிவுகளுக்கு, கொலைகளுக்கு விடைகொடுக்கவே மக்கள் விரும்புகின்றார்கள். நிம்மதியாக கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். இவ் வகையில் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு நீங்கள் முன்வரவேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

ஆனால் மாவீரர் தின உரையானது பேச்சுவார்த்தை தொடர்பாக ஏனோ தானோ என்றே அமைந்துள்ளது என்பதே என் போன்றோரின் தாழ்மையான அபிப்பிராயம்.

எமது மக்கள் அழிக்கப்படுவதையும், அகதிகளாகி நாட்டை விட்டு ஒடுவதையும்தான் எந்த ஒரு சிங்கள அரசும் விரும்பும். எமது நடவடிக்கைகள் அவர்களின் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்தால் அதனால் இலாபமடையப் போவது அவர்கள் தான். எனவே சிங்கள அரசு சாக்கு போக்கு சொல்லாத அளவிற்கு எமது முன் முயற்சிகள் இருக்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.

எனவே, பேச்சு வார்த்தைக்கு நான் அழைப்பு விடுத்தேன். ஆனால் சிங்கள அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை, எனவே எனக்கு யுத்தத்தை தவிர வேறு மார்க்கமில்லை என்று சிந்திக்காமல், பேச்சுவார்த்தைக்கான உங்கள் அழைப்பு நேரடியானதாகவும், நம்பத் தகுந்ததாகவும், இருக்க வேண்டும் என்பதுடன், எவ்வித காரணமும் காட்டித் தப்பித்துக்கொள்ளாமல் அரசு பேச்சு வார்த்தைக்கு வரும் வகையில் உங்கள் அழைப்பு இருக்க வேண்டும் என்பதுமே எமது அவா.

இது ஒரு புறம் இருக்க யாழ்ப்பாணத்தில் அரச நிர்வாகம் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது எனவும் நீங்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளீர்கள். உங்களது பார்வையில், தமிழ் பிரதேசங்களை அரசு இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வைத்துக்கொண்டு, அங்கு சிவில் நிர்வாகம் நடக்கின்றது என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என நீங்கள் கூறலாம்.

அதற்காகவே அரச நிர்வாகத்தை நடாத்த நாம் அனுமதிக்கவில்லை எனவும் நீங்கள் கூறலாம். அப்படியாயின் தமிழ் மக்களின் நிலை என்ன? சிவில் நிர்வாகத்தை சீர்குலைப்பதன் ஒரு பகுதியாக......

1. லயன் எயர் விமானத்தையும் அதில் பிரயாணம் செய்த பிரயாணிகளையும் சேர்த்து சுட்டு வீழ்த்தினீர்கள். இதனால் பாதிப்படைந்துள்ளது யார், பொதுமக்கள் இல்லையா?

2. நீதிமன்றங்களை மூடும்படி உத்தரவிட்டீர்கள். நீதிமன்றங்களும் மூடப்பட்டது இதனால், கண்ட பலன், அத்துமீறிய இராணுவத்தினரைக்கூட விசாரிக்க முடியாத சூழ் நிலை. இவை எல்லாமே அநுராதபுரத்திற்கு மாற்றலாகும் நிலை. இதனால் பாதிக்கப்படுவது யார் பொதுமக்கள் இல்லையா?

3. மாநகரசபை முதல்வர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைக் கொன்று வருகின்றீர்கள். இவர்கள் கொல்லப்பட்டாலும் கூட ஆணையாளரின் கீழ் இந் நிர்வாகங்கள் செற்படத்தானே வேண்டும் 1990-95வரை யாழ்ப்பாணம் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பொழுதும் கூட இந் நிர்வாகங்கள் இயங்கியதுதானே.

இன்றும் ஏனைய வட-கிழக்கு மாவட்டங்களில் இந்நிர்வாகங்கள் இயங்கிவருகின்றது தானே. ஏன் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இதனை சீர்குலைக்க முனைகின்றீர்கள். தயவு செய்த அதற்காவது காரணத்தை கூற முடியுமா? உங்கள் செயற்பாடுகள் அரசை பாதிப்பதையும் விட முழுத்தமிழ் மக்களையும் பாதிக்கின்றது என்பதை தாங்கள் உணரவில்லையா? மக்களின் அன்றாட வாழ்வை சீர்குலைப்பதன் மூலம், மக்களின் ஆதரவைப்பெற முடியாது என்பதுடன், இதனால் உங்கள் நோக்கத்தையும் அடைந்து விடமுடியாது. நான் உங்களுடன் பலவிடங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பினாலும், அவற்றை எழுதினால் எனது கடிதம் நீண்டுவிடும். எனவே எமது கருத்துக்களையும் தங்கள் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு தாழ்மையடன் வேண்டுகின்றேன்.

**ஆவரங்கால் சிவலிங்கம்**

## உருமாறிய......

மூன்றாம் பக்கம் தொடர்ச்சி

விளங்கி வந்தது உள்ளங்கை நெல்லிக்கனி. உதவிக்காக விரைந்த இந்தியாவை எட்டி உதைத்த பாங்கிலேயே 1987 ஜூலை 29க்குப் பின்னரான பல்வேறு விடயங்களும் நடந்தேறின.

இதன் உச்சக்கட்டம் 1991ல் இந்தியப் பிரதமராகும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்த ராஜீவ் காந்தி படுகொலைக்கு உள்ளானதாகும். இந்தியா தனது சொந்தப் நலன்களுக்காகவே இலங்கைத் தமிழர் விடயத்தில் தலையிட்டது என்ற எடுகோளின் அடிப்படையிலான தவறான அரசியல் முடிவுகள், புதுடில்லி இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தைக் கை கழுவி விடும் சூழ்நிலைக்கு இட்டுச் சென்று விட்டது. பாக்கு நீரிணைக்கு அப்பால் வாழும், மொழியால், கலாச்சாரத்தால், பண்பாட்டால் ஒருமித்த மக்கள் மத்தியிலிருந்து ஒரு சில குரல்கள் அவ்வப்போது ஒலித்தாலும் கூட, இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பு என்பது எட்டாக்கனியாகியுள்ளது.

அரசியல் கொலைகள், சித்திரவதைகள், மற்றைய சமூகங்களை மாற்றாந்தாய் மனப்பான் மையுடன் நடாத்துதல், மக்கள் பிரதிநிதிகளின் படுகொலைகள், புனித இடங்கள் மீதான குண்டு வெடிப்புக்கள் என்றவாறாக பல விடயங்களுடன் தொடர்பு படுத்தி விடுதலைப்புலிகள் கண்டிக்கப்படுமளவுக்கு நிலமை இப்போது மாறி விட்டது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த ஜெரிலூஸ் இக்குற்றச் சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

எனவேதான், விடுதலைப்புலிகளின் ஜனநாயக மறுப்பு போக்கு, இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு, பரந்த பொது நலன்களை விட குறுகிய இயக்க நலன்களை முதன்மைப்படுத்தும் தன்மை என்பவையே தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளின் நியாயப்பாட்டு அங்கீகரிக்கப்படாமைக்கு காரணம் என்பது தெளிவாகிறது.

இத்தகைய போக்கிலிருந்து விடுதலைப்புலிப் புலிகள் விடுபட்டாக வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் தமக்கென மாற்றுத் தலமையைக் கட்டியெழுப்ப வேண்டியது தவிர்க்க முடியாததாகும். ●

## இவரைத் தெரிகிறதா?



உத்தியோகபூர்வ
வைபவங்களில் பங்கேற்காத
உத்தியோகபூர்வமான மக்கள்
பிரதிநிதி. அடையபளம்
காட்டாமல் ஆசனத்தில்
அமர்ந்திருப்பவர்.
எழுத்துக்கலை அற்புதமாகக்
கைவரப்பெற்றவர்.
கற்பனைகளை விற்பனை
பண்ணக் கற்றுக்கொள்ளக்கூடிய முன்னுதாரணம்.
கண்டுபிடிக்க முடியாவிட்டால்
வாருங்கள் பதனோராம் பக்கத்திற்கு.

**இன்றைய ஜனாதிபதி சந்திரிகா அல்லது எந்த ஒரு சிங்கள ஜனாதிபதியாவது தமிழர் பிரச்சினையை தீர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றீர்களா?**

*த. சுகந்தன், திருகோணமலை.*

சிங்கள அரசியலில் பாரிய மாற்றங்கள். எதுவும் ஏற்படவில்லை என்பது உண்மையே. முதன் முறையாக சந்திரிகா அரசு முன்வைத்த தீர்வுத் திட்டமும் முழுமையற்ற ஒன்றே. அத்தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாத சூழ் நிலையிலேயே இன்றைய அரசும் உள்ளது. இவை எல்லாம் பாதகமான அம்சங்களாக இருந்தாலும் கூட, தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு நிர்ப்பந்தங்களை உருவாக்குவதன் மூலமும், சர்வதேச நெருக்குவாரங்களை உருவாக்குவதன் மூலம் மாத்திரமே எந்த சிங்கள ஜனாதிபதியையும் பிரச்சினையை தீர்க்க நிர்ப்பந்திக்க முடியும்.

**தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழுவின் இலங்கை விஜயத்தின் நோக்கமென்ன?**

*க. ராஜ்குமார், நல்லூர்.*

தென்னாபிரிக்காவில் புலிகள் தலைமையகத்தை உருவாக்கப் போகின்றார்கள் என்ற வதந்தியால், எமது வெளிவிவகார அமைச்சர் தென்னாபிரிக்கா பறந்து சென்று புலிகளுக்கெதிரான தனது பக்க நியாயங்களை எடுத்து வைத்ததுடன், நேரடியாக விடயங்களை அறிந்து கொள்ள தென்னாபிரிக்க தூதுக்குழு ஒன்றிற்கும் அழைப்புவிடுத்தார். அதன் நிமித்தமே தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழு இங்கு வருகை தந்தது. ஒருவகையில் நன்மையே. ஏனெனில் அரசைப்பற்றியும், புலிகளைப்பற்றியும், ஏனைய இயக்கங்களைப் பற்றியும், அவர்களால் நேரடியாக அறிந்து கொள்ள முடிந்தது.

**தென்னாபிரிக்க குழு தமிழ்க்கட்சிகள் இடையில் ஐக்கியத்தை வலியுறுத்தியுள்ளதே?**

*ச. சுந்தரமூர்த்தி, வெள்ளவத்தை.*

தமிழ்க்கட்சிகளிடையில் ஐக்கியத்தை உருவாக்கவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தான் தேவை போல் உள்ளது.

**வவுனியா கூட்டுறவுச் சங்கத்தலைவர் வீரசிங்கத்தின் மரணச்சடங்கை அவதானித்தீர்களா?**

*ஆர். நவீனன், வவுனியா.*

செய்த இயக்கமும் கூட அவரைத் தன்னவர் என்று உரிமை கோரியது அவருக்கு மக்கள் மத்தியல் உள்ள நன்மதிப்பையே பறைசாற்றுகின்றது. ஆனால் அவரின் மரணச்சடங்கை தேர்தல்களமென நினைத்து தமது சின்னங்களால் சோடித்தவர்களும், மரணச்சடங்கில் வீர உரை நிகழ்த்தியோரைப்பற்றியும் மக்கள் சிறப்பாகவே தெரிந்துவைத்துள்ளார்கள்.

**தமிழ் இயக்கங்கள் எல்லாம் மனித உரிமைகள் தினத்தை கொண்டாடுவது தொடர்பாக என்ன கருதுகின்றீர்கள்.**

*எம். வேலாயுதம், சாவகச்சேரி.*

டிசம்பர் 10ம் திகதியை மனித உரிமைகள் தினமென ஐ.நா.சபை அறிவித்ததற்கு, உலகில் மனிதனின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே அதன் முக்கியகாரணமாகும். இதனை அவர்கள் மறக்காமல் இதனையே வருடாவருடம் இதனை நினைவு கூர்கின்றார்கள். ஆனால் டிசம்பர் ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்டத்திற்கும், யுத்தத்திற்கும் ஆதரவாக வாக்களித்துவிட்டு டிசம்பர் 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் தினத்தை கொண்டாடுவது தான் வேடிக்கையானது. இதனைப் போன்றே இன்றும் உட்கட்சிக்கொலைகளிலும், அப்பாவிகளைக் கொலை செய்வதிலும் ஈடுபட்டிருக்கும் தமிழ் இயக்கங்கள், முதலில் தம்மைத்திருத்திக்கொண்டு, மனித உரிமைகள் தினத்தை கொண்டாடும் அளவுக்கு தம்மை தகவமைத்துக்கொள்ளவேண்டும்.

# சொலமன் பதில்கள்

**ஜயசிக்குறு நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளமை பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கலாம் என்பதற்கான பச்சைக்கொடியா?**

*பி. புத்திரசிகாமணி, ராமபைக்குளம், வவுனியா.*

ஜயசிக்குறு நிறுத்தப்படவில்லை என்றும் "ரிவிபல" என்று பெயரை மாற்றியுள்ளதாகவுமே கூறுகின்றார்கள். மாங்குளத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறுவது கடினமாக இருந்ததால், எந்தவித ஆரவாரமுமின்றி ஒட்டி சுட்டானைப் பிடித்துள்ளார்கள். இப்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகள் இராணுவத்தின் ஆட்டிலெறி செல்வீச்சு எல்லைக்குள் வந்துள்ளதாம். இது புலிகள் மீதான இன்னொரு இராணுவ அழுத்தமே. புலிகள் இப்பொழுது பல முனைகளைப் பலப்படுத்த வேண்டி இருக்கும். இதுவே அவர்களது பலவீனமாகவும் மாறும். அப்பொழுது மீண்டும் யாழ் நோக்கிய பாதை திறப்பில் ஈடுபடக்கூடும். என்றும் கூறப்படுகின்றது. மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கான பச்சைக் கொடியாகவும் இருக்கலாம்.

**எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதக்கணக்காக மின்சாரமில்லை. புலிகள் ஏன் இம்மின்மாற்றிகளை தகர்த்து வருகின்றார்கள்?**

*பொ. சிவமூர்த்தி, மண்டூர்.*

மின் மாற்றிகளை தகர்ப்பதன் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தலாம் எனப்புலிகள் சிந்திக்கக்கூடும். அத்துடன் மின்சாரம் இல்லாமல் போவதால் சகல தொழில்களுமே பாதிக்கப்படும். இதனால் மக்களுக்கு அரசின் மேல் ஆத்திரம், கோபம் வரும். இது தமக்கு சாதகமாக இருக்கும் என புலிகள் நம்பலாம். மக்களுக்கு சகலதும் கிடைத்தால் அவர்களுக்கு போராட்டத்தின்மீது மனம் திரும்பாது. ஆகவே அவர்களை கஸ்ரத்திற்குள் வைத்திருக்க வேண்டுமெனவும் புலிகள் யோசிக்கலாம். பட்டதாரியாகிய பின் சாதாரணதரப் பரீட்சை எழுதினால் எப்படியிருக்குமோ அப்படித்தான் முல்லைத்தீவு கிளிநொச்சி வெற்றிகளுக்குப் பின் மின்மாற்றிகளுக்கு முன்வீரம் காட்டுவதும் இருக்கிறது.

**பக்கவாத்தியங்களுக்கு அரசியல் கட்சி என்ற ஒன்று தேவையா?**

*ஆர். பூபாலசிங்கம், புதூர், மட்டுநகர்.*

இதனை நீங்கள் உங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்திடம் தான் கேட்க வேண்டும். புலிகள் தான் முக்கிய பங்காளிகள் எனவும் தாங்கள் பக்கவாத்தியங்கள் எனவும் முழங்கி வருபவர் அவர்தான். அவருக்கு ஆர்வமிருந்தால் முக்கிய பங்காளிகளுடன் இணைந்து செயற்படுவதுதான் சரியானது. முக்கிய பங்காளிகளுடன் இணைவதைவிடுத்து தன்னையும் கொச்சைப்படுத்தி, தனது கட்சியையும் கொச்சைப்படுத்தி, வருவது தேவையா என்றுதான் எனக்கும் கேட்கத் தோன்றுகின்றது.

**புலிகள் தன்னையும் ஏனைய இரு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் செய்ய அனுமதித்துள்ளார்களாம், கூட்டணியின் அன்றாட அரசியல் வேலைகளை குழப்ப மாட்டார்கள் என்பதனையே இது காட்டுவதாக ஜோசப் பரராசசிங்கம் 20ம் திகதியை சன்டே ரைம்ஸ்க்கு பேட்டி கொடுத்துள்ளாரே?**

*எம். ரவிசங்கர், வாவிக்கரைவீதி, மட்டுநகர்.*

கூட்டணியைச் சார்ந்த யாழ் மாநகரசபையின் இரண்டு முதல்வர்களான சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் ஆகியோர் புலிகளால் கொலை செய்யப்பட்டதைப் பற்றி அவரிடம் கேட்டதற்கு அது உணர்ச்சிபூர்வமான கேள்வி. அதற்கு பதில் கூற முடியாதெனவும் கூறியுள்ளார். ஜோசப்பிற்கு கூட்டணி அல்ல முக்கியம், தனது அரசியல் நடக்கவேண்டுமென்பதே முக்கியம். அதற்கு யாரது காலிலும் விழலாம் தப்பில்லை. யாழ் மாநகர முதல்வர்கள் மாத்திரமல்ல அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற முக்கிய தலைவர்களும் புலிகளால் தான் கொலை செய்யப்பட்டார்கள். அதிலும் யோகேஸ்வரன் புலிளுடன் அந்நியோன்னிமான உறவைத்திருந்தார். ஆனால் அதுவே அவருக்கு காலனானது. அக்கெதி ஜோசப்பிற்கும் ஏற்படக்கூடாது என்பதே எமது பிரார்த்தனை.

---




**குமாரர் தலைமறைவோ?**

சிங்கத்தின் குகைக்குள் தான் ஒரு புலி என வீரமாகப் பேசியவர் குமாரர். தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் அரசாங்கத்தின் சேலைத் தலைப்பில் தமிழ்க்கட்சிகள் தொங்குவதாகக் கேலியும், கிண்டலும் செய்தவர் அவர். அத்துடன் நான் ஒரு புலி ஆதரவாளன் எனப் பிரகடனமும் செய்தார். தொலைக்காட்சிப் பேட்டி ஒலிபரப்பான சில தினங்களில் சீமான் வெளிநாடு பறந்து விட்டார். இப்போது அங்கிருந்து கொண்டு நான் வரலாமா? வந்தால் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுமா? என்றெல்லாம் தெரிந்தவர்களிடம் தொலைபேசியில் கேட்டு வருகிறாராம். அஞ்சுவது அஞ்சாமை பேதமை.

**பெற்றோர் கௌரவிப்பு**

திருச்சியில் நடந்த ம.தி.மு.க பொதுச்செயலாளரின் மகனது திருமண வைபவத்தில் மத்திய அமைச்சர்களுடன் வி.ஐ.பி அந்தஸ்தில் வேலுப்பிள்ளை தம்பதிகளுக்கும் கௌரவிப்பு. இந்தியப் படையினரைத் திருப்பி அனுப்பிய பின்பும், பிரதமராகும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்த ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்பும், புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெற்றோர்களான வேலுப்பிள்ளை தம்பதிகள் இந்தியாவில் அமைதியாக வாழ முடிகிறது. ஆனால் மாற்றுக்கருத்துக் கொண்ட இயக்கங்களை சார்ந்தவர்களின் பெற்றோர்கள் என்பதற்காக. எமது மண்ணிலிருந்து துரத்தப்பட்டவர்கள் பலர். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி.

**தந்தையரை அறியாப் பிஞ்சுகள்**

தொலைதூரக் சிங்களக் கிராமங்களின் நிலமைகள் பற்றி ஆய்வு நடத்திய குழுவினர் வெளியிட்ட அறிக்கை பலரையும் திகைக்கச் செய்துள்ளது. போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் கூட இல்லாது அவதிப்படும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பெண்கள் பாலியல் முறைகேடுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக வருபவர்களால் விரும்பி அணைக்கப்படுபவர்கள் தாயாரான பின்னர் கைவிடப்பட்ட சம்பவங்கள் ஏராளமாம். சம்பந்தப்பட்டவர்களை தேடி ஒவ்வொரு முகாமாக ஏறியிறங்கும் பரிதாபநிலைதான் இப்பகுதிச்சிங்கள இளம் பெண்களுக்கு வாய்க்கிறதாம்.

**காலியில் நடந்த அத்துமீறல்**

கடந்த நவம்பர் 24ம் திகதியன்று காலிப்பகுதியில் கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபட்டிருந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இந்த அத்துமீறல் நடந்ததாம். இதே மாதிரியான சம்பவம் தமிழர் கிராமத்தில் நடந்திருந்தால் இனவாத ஆக்கிரமிப்புப் படைகளின் அட்டகாசம் என்று உலகெங்கும் அம்பலமாக்கப்பட்டிருக்கக்கூடும். தென்பகுதியான காலியில் நடந்ததால் உயர் மட்டவிசாரணை ஆரம்பமாகும் என்று செய்தியுடன் அனைத்தும் கப்சிப்.

**யாழ்ப்பாணம் போய் வருவது சாதனையே**

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையே இன்று போக்குவரத்தில் ஈடுபடுவது பெரும் சாதனையே. கப்பல் எப்போது ஓடும் என்று காத்திருந்து படைத்தரப்பின் அனுமதி பெற்று, கப்பலில் இடம் பிடித்து பயணம் செய்வது இலகுவில் கற்பனை பண்ணக்கூடியதல்ல. இந்த நிலையில் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே தினசரி ஐந்து புகையிரதங்கள் ஓடிக்கொண்டிருந்தன என்பதும் பலருக்கும் மறந்து போயுள்ளதுபோல் தெரிகிறது. அண்மையில் இயற்கை எந்திய பிரதி அமைச்சர் ஒருவரின் இரங்கல் கூட்டத்தில் அவரது மாபெரும் அரசியல் சாதனைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டது அவரது யாழ்ப்பாணப் பயணம்.

**கற்பனைவளர்ப்பதில் கவனம்**

அரசாங்கம் மூன்று முனைகளில் நெருக்குதல்களை எதிர்நோக்குகிறது என்பது பச்சை அணியின் கணிப்பு. முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்திருப்பதால் பொருளாதாரத் துறையிலும், போர் தொடரப்படுவதால் தனியார் துறையின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இராணுவ ரீதியிலும், ஏற்றுமதிகளைப்பாதிக்கும் ஆசியப் பொருளாதார நெருக்கடி மற்றுமொரு முனையிலும் நெருக்குகிறது, என்று அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், தாங்கள் பதவிக்கு வந்தால் எப்படி இவற்றைத் தீர்ப்போம் என்பதை மட்டும் எடுத்துக்கூறுவதாக இல்லை. முதலில் அதிகாரம் கிடைக்கட்டும் பின்னர் பாருங்கள் என்று கற்பனை வளர்ப்பதில்தான் கவனம்.

**தன்மானம் உண்டோ**

தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமையும், ஆற்றலுமுள்ள தலமைத்துவமும் இல்லாமலிருக்கிறது என்பது பகிரங்கமான இரகசியம்தான். இதனால் தமிழ்ச் சமூகத்தின் இணைக்குரலாகவும் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டுவருவதாக அமைச்சர் அஷ்ரப் எடுத்தியம்பியுள்ளார். தமிழன் என்று சொல்லித் தலை நிமிர்ந்து நிற்கும் உணர்ச்சியை ஊட்டிய தலைவர்களின் வாரிசுகளாக இருப்பவர்களுக்குக் கூட தன்மானம் இருக்கிறதோ என்பதும் கேள்விக்குறிதான்.

**அண்ணாமலையின் ஆன்மா**


தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அரசு அரசியல் யோசனைகளை முன்வைத்தால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை வலியுறுத்துவார்கள். பழம்பெரும் இடதுசாரித்தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணாவின் கண்டுபிடிப்பு இது. அது இருக்கட்டும் விடுதலைப்புலிகள் மட்டும் தான் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்பதுதான் இவர்களது எண்ணமோ. கொலையுண்ட அண்ணாமலை போன்றவர்களின் ஆன்மாக்கள் தான் கேள்வி எழுப்பவேண்டும்.

**சொன்னதும் சொல்லாததும்**

தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 600 விண்ணப்பங்கள் கிடைத்தன. அதில் 50பேர் தெரிவாகினர். நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டபோது ஒருவராவது தேறவில்லை. சான்றிதழ் இருக்கிறது. தகுதியான பயிற்சி இல்லை அண்மையில் முக்கிய அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட வாக்குமூலம் இது. இதன் உண்மைத்தன்மை சந்தேகத்திற்கிடமற்றது. ஆனால் விண்ணப்பம் கோரப்பட்டது எப்போது? எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்? நேர்முகப்பரீட்சை எப்போது நடத்தப்பட்டது? என்ற விபரங்களையும் சேர்த்துப் பார்த்திருந்தால் இன்னமும் சிறப்பாக இருந்திருக்கும். விண்ணப்பம் கோரப்பட்டதுக்கும், நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதுக்கும் இடையில் சுமார் மூன்று வருடகால இடைவெளி. படித்தவைகள் சோதனையில் சித்தி பெற்றதும் மறந்துபோய்விட்டதாக்கும்.

## எழுத்து செல்லப்பாவுக்காக இரங்கல்

சி.சு. செல்லப்பா அவர்கள் 1930களில் மணிக்கொடி காலத்து எழுத்தாளர். எழுத்து பத்திரிகை அவரால் நடத்தப்பட்டது. மணிக்கொடிக்கு பின்னர் எழுத்து மிகப்பரவலாக பேசப்பட்டது.



தமிழில் நவீனத்துவக்கத்துக்கும், புதுக்க விதைக்கும் எழுத்து களம் அமைத்துக் கொடுத்தது.

வாடிவாசல் என்ற நாவல் அவரால் எழுதப்பட்டது. தமிழில் குறிப்பிடத்தக்க நாவல் அது. தனக்கென தனித்துவமான பாணியாக விமர்சனமுறை ஒன்றை வைத்திருந்தார்.

அலசல் விமர்சனம் என்று அழைக்கப்பட்டது. சி.சு, சி.சு. செல்லப்பா ஆகியன பிரபல்யமான பெயர்கள் தான். ஆனால் சி.சு. செல்லப்பா தனித்துவங்களை கொண்டிருந்தார். அண்ணாரின் மறைவுக்கு புதிய கண்ணோட்டம் தனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

## மதியை இழந்........

முதலாம் பக்கம் தொடர்ச்சி

அதனை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்பது தான் வரலாறு. இன்று வாய் மூடி மௌனிகளாக இருக்கும் தமிழ் சமூக மும் என்றென்றைக்கும் இப்படியே இருந்துவிடாது என்பதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நம்பிக்கை கொண்டுள்ளது.

தமிழ் சமூகத்தின் மத்தியிலிருந்து இதற்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்காதவரை இந்தப்படுகொலைகள் ஓய்ந்துவிடாது. அதுமாத்திரமல்ல எந்த நேரத்திலும் யாரை நோக்கியும் இந்த துப்பாக்கிகள் திரும்பும்.

சமூகவிரோதிகள், உளவாளிகளை கட்டுப்படுத்தல் என்று ஆரம்பித்த கொலைகள் இன்று யாரையும் எந்த நேரத்திலும் எவ்வித விசாரணைகளுமின்றி சமூகவிரோதிகளாகவும், சேதத்துரோகிகளாகவும், குற்றம் சுமத்தி கொல்லும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்றிருப்பது அதனையே உணர்த்தி நிற்கிறது.

அரசியல் கருத்து மாறுபாடு உடையவர்கள் இவ்வாறு கொல்லப்படுவதை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாக கண்டிக்கிறது. தமிழ் மக்களின் விடுதலையின் பேரால் செய்யப்படும் இக்கொலைகளுக்கெதிராக தமிழ் சமூகம் குரல் கொடுக்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறது.

நீண்டகால அரசியல் ஈடுபாடு கொண்ட பொன். மதிமுகராஜா அவர்கள் தமிழ் சமூகத்தின் விடிவிற்காக உழைத்தவர். தமிழ் சமூகத்தின் அவலங்களுக்கெதிராக குரல் கொடுத்தவர். போராட்டங்களில் முன்நின்றவர். அவரது படுகொலை தமிழ் சமூகத்திற்கு பெரும் இழப்பு. தமிழ் மக்களின் நலனில் அக்கறைகொண்டு உழைத்த அவருக்கு நாம் எமது அஞ்சலியை உரித்தாக்குவதோடு, அவரது இழப்பால் துயருற்றிருக்கும் மக்களுக்கும், அவரது அமைப்பை சார்ந்தவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். ●

## தமிழ் மொ.......

7ம் பக்கம் தொடர்ச்சி

தமிழ்மொழி மூலம் பணியாற்றக்கூடியவர்கள் போதுமானளவில் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் அமைச்சரவைத் தீர்மானம் மூலமே மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

ஒவ்வொரு அமைச்சும், நாடு முழுவதிலுள்ள அலுவலகங்களில் தமிழ்மொழியை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அவசரமாகவும், அவசியமாகவும் மேற்கொள்ளவேண்டும்.

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பகுதிகளில் 12.5 சதவிகிதத்திற்கு மேலாக சிங்கள மொழி பேசுபவர்கள் அனுபவிக்கும் அதே வசதிகள் ஏனைய மாவட்டங்களில் அதே விகிதாசாரத்தைக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வகை செய்யப்பட்டாக வேண்டும்.

தமிழ்மொழி அமுலாக்கல் என்பது போர் காரணமாக பின்தள்ளப்படக்கூடிய விடயமல்ல. இது உணர்ச்சி பூர்வமான மொழிப் பிரச்சினையல்ல. பதிலுக்கு இலங்கை என்பது சிங்களம், தமிழ் என்ற இரு மொழிகளுக்கும் தாய்வீடு என்ற நம்பிக்கையைக் கட்டிஎழுப்பும் அத்திவாரம் ஆகும்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களும் சமத்துவமான உரிமையுடைய மக்களாக வாழ முடியும் என்ற உணர்வு சாதாரண மக்களுக்கு ஏற்படுவதற்கான பலமான அடித்தளம் இதன் மூலமே இடப்பட முடியும்.

இந்த வகையில் சம்பந்தப்பட்ட பொறுப்பு உள்ளவர்கள் தமிழ் மொழிஅமுலாக்கலுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களாயின் எதிர்காலத்தில் நல்ல விளைவுகள் ஏற்பட இடமுண்டு. ●

## நிதி ஒதுக்கீ............

5ம் பக்கம் தொடர்ச்சி

லேயே தாம் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை நிராகரிக்க வேண்டியேற்பட்டது என்று ஐ.தே.க தரப்பில் சப்பைக்கட்டு கட்டப்படுகிறது.

ஆனால் அமைச்சர் தொண்டமான் அவர்களோ, எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல், கொண்டுவரப்பட்ட திருத்தங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்று கேட்டிருக்கிறார்.


கைவிடப்பட்ட தோட்டங்களை விற்பது தொடர்பான அதிகாரம் அமைச்சரவையிடமே இருக்க வேண்டும். அல்லாமல் தோட்ட உள்ளகக்கட்டமைப்பு அமைச்சு அதனைச் செய்ய முடியாது என்றே ஐ.தே.கட்சியினர் கூப்பாடு போடுகின்றனர்.

காணி விற்கும் அதிகாரம் தமிழ் அமைச்சருக்கா என்ற காழ்ப்புணர்வே இங்கு மறைந்து நிற்கிறது. அரசில் முக்கிய அமைச்சர்களாக இருக்கும் சிலரின் மானசீகமான ஆதரவும் இதற்கு உண்டு என்று அறிய முடிகிறது.

இது மாத்திரமல்லாமல், இலங்கையில் சமஸ்டிமுறை அமுல்படுத்தப்படாமல் எண்ணிக்கையில் பெரிய இனத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகளே தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பதென்பது அந்த மக்களின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு தடை யாகவே அமையும் என்பதையே இந்தச் சம்பவம் எடுத்துரைத்துள்ளது.

எனவே இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியலமைப்பிற்கு பதிலாக அனைத்து இன மக்களதும் அபிலாசைகளை பிரதிநி தித்துவப்படுத்தும் அரசியலமைப்பே அனைத்து இன மக்களின் நலன்களையும் உறுதிப்படுத்தும். இது இன்றைய காலத்தின்தேவை. ஒவ்வொரு சம்பவங்களும் அதனை உணர்த்துகின்றன. அதில் தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சிற்கான ஒதுக்கீட்டிற்கு எதிராக நடந்த வாக்களிப்பு ஒரு சான்று. ●

# குறுக்கெழுத்துப் போட்டி-41



### இடமிருந்து வலம்

1. அண்மையில் ஈராக் மீது கூட்டாக தாக்குதல் தொடுத்த இரு நாடுகளில் ஒன்று.
5. பாவம் செய்தவன் திரும்பியிருக்கிறான்.
7. ஆங்கிலத்தில் டெய்லர்.
9. நீண்ட முள் வாலையுடைய தட்டையான மீன்.
12. திரும்பியிருக்கும் நாற்காலி.
13. பிச்சை.
15. ஒரு நோய் விட்டுச் சென்ற தடம். பலருக்கும் இடது கை மேற்புறத்தில் இன்றும் உள்ள வடு.
19. செயல். இலக்கணத்தில் பயனிலையாக வரும் சொல்வகை.
20. உடலில் ஓடுவது. (குழம்பி)
22. குளோரோபில். தாவர இலைக்கு நிறம் தருவது.
26. பண்டிகை நாள் வந்தால், வாங்கி அணிவது.
27. களவு, பண மோசடி.
29. இது - கல்லாதவர்களுக்கு முகத்தில் இரண்டு இருப்பதாக குறள் சொல்கிறது.
30. எண்சாண் உடம்புக்கு இதுவே பிரதானம்.
32. களவெடுப்பவன்.
34. செல்வம் என்றும் பொருள்; வண்டியும் இழுக்கும். இங்கே திரும்பியிருக்கிறது.
36. திருப்பிப் பார்த்தால், புண்ணியமில்லை.
37. பழங்குடி.

### மேலிருந்து கீழ்

1. இங்கே சந்திரிகா போய் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மட்டும் செய்து திரும்பியிருக்கிறார்.
2. கண்கள் மேல்நோக்கிச் செருகிய மயக்கநிலை.
3. கசக்கிக் கட்டலாம் முதலெழுத்தில்லையே.
4. துன்பம்.
5. புத்த கோயில்.
6. 20ம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைக்குப் புதிய உயிர் தந்தவன்.
8. சாரதி. காருக்குத்தான் ட்ரைவர்; தேருக்கும் யானைக்கும்...? (தலைகீழ்)
10. தமிழ்ப்படுத்தப்பட்ட பூசனை, வழிபாட்டு முறை. வீட்டில் கிடைக்கும் திட்டுக்கும் இந்தப் பதம்தான். (குழம்பியிருக்கிறது)
11. கணவனை இழந்து வாழும் நிலை.
14. தலைநகரம்.
16. ஆய்விற்குத் தேவை. (கடைசியெழுத்தில்லை)
17. ---- சரணம் கச்சாமி. (தலைகீழ்)
18. இதோ மற்றுமொன்று பிறந்திருக்கிறது.
19. நடந்திருப்பது அச்சம் கொள்ள வைக்கும் செயல்.
21. கவிஞர்கள் இது இல்லையோ என்று வியந்து கொண்டிருக்க, பெண்கள் ஒட்டியாணத்தை இங்கே அணிந்து கொள்வர்.
23. கை கால் அசைவால் ஜாடை செய்தல்.
24. புதல்வனிடமிருந்து இளமைப் பருவத்தை வாங்கிக் கொண்ட குருகுல அரசர்களிலொருவன்.
25. சோதிடம். தலைகீழாகியிருக்கிறது.
28. தலைகீழ் மைதானம்.
31. மீன் பிடிக்கும் சாதனம். (தலைகீழ்)
33. தலைகீழ் ஆகாயம்.
35. மழைக் காலம்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

### குறுக்கெழுத்துப் போட்டி-40 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. பொன்னம்பலம்
6. ஆணை
8. பட்டயம்
8. கசப்பு
10. கவரிமான்
12. தாவரம்
13. சில்
14. பிசாசு
15. அச்சுதன்
16. கராம்பு
18. பிப
19. ஆம்
20, காசு
21. சேய்
22. தாவடி
23. மப்பு
24. வாடை
26. புன்னகை
28. சுளகு
29. கும்பிடு
30. சதிர்

**மேலிருந்து கீழ்:**

1. பொங்கல்
2. கன்னிமாடம்
3. பயன்
4. லட்(டு)
5. பச்சாதாபம்
7. ஆடம்பரம்
9. அசுவம்
11. வசியம்
14. பிசுபிசுப்பு
16. புத்தாண்டு
17. ராட்டினம்
19. ஆய்வாளர்
20. காமன்
25. குடை
27. குகை
28. சுதி

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ந. கந்தசாமி**
**538ஏ சி8 அலுத்மாவத்த வீதி,**
**கொழும்பு -15.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. ம. செல்வராசா
   அஜந்தா. ஸ்ருடியோ, வவுனியா.
2. கே. ஜெஸ்மிதா
   2ஏ கன்னன்குடா, மட்டக்களப்பு.
3. திருமதி கிருஷ்ணானந்தலிங்கம்
   பள்ளிமுனை வீதி, மன்னார்.
4. ஏ. பஸ்னா
   புதுக்குடியிருப்பு, பத்ளு ஓயா.
5. வி. செல்வராஜா
   புகையிரத நிலைய வீதி, வவுனியா.

## இவர்தான் அவர்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் செயலாளர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். பாராளுமன்ற உறுப்பினர். 1977 முதல் தமிழர்களின் அரசியலில் பங்குபற்றிவருபவர். தினமுரசு வார இதழின் ஆசிரியர். பத்திரிகையின் எழுத்துக்களில் யுத்தத்தையும் அரசையும் காரசாரமாக விமர்சிக்கும் இவர் பாராளுமன்றத்தில் அவசரகால சட்டத்திற்கும் கூட ஆதரவாக வாக்களித்து வருபவர். 968 வாக்குகளால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவானவர். இதில் 966 ஊர்காவற்துறை தொகுதியிலிருந்து பெறப்பட்டது. குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இலங்கை வானொலியில் பங்கர் திருமகன் வானொலி நாடகம் தயாரித்து வழங்கியவரும் இவரே. இவர் தான் நடராசா அற்புதராசா.

# வெற்றி நிச்சயம் முடிவுற்றது. ஆனாலும் யுத்தம் தொடர்கிறது.

சாணக்கியன்

யாழ்ப்பாண வீதியை திறப்பதற்காக ஒன்றரை வருடகாலம் நடைபெற்றுவந்த "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை நவம்பர் 29ம் திகதியுடன் முடிவடைந்து விட்டதாக உத்தியோகபூர்வமாக இராணுவம் அறிவித்துள்ளது.

வவுனியா தாண்டிக்குளத்தில் இருந்து கிளிநொச்சி வரையிலான 74கிலோ மீற்றர் நீள நெடுஞ்சாலையை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதே அரசின் நோக்கமாக இருந்தது. வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் ஓர் தரைவழிப் போக்குவரத்துப் பாதையை திறப்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

இதன் மூலம் கிழக்கு மேற்காக வன்னி நிலப்பரப்பு பிரிக்கப்படும் என்பதும், இது புலிகளை பாரியளவில் பல வீனப்படுத்தும் என்பதும ஒரு விடயம். அது மாத்திரமல்லாமல் முழு இலங்கைத்தீவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதாயும் இது ஓர் தோற்றத்தை அளிக்கும்.



அதே சமயம் இப்படியான ஓர் இராணுவ வெற்றி புலிகளுக்கு மனோவியல் ரீதியான ஓர் தாக்கத்தையும் ஏற்படுத்தும். இவை எல்லாவற்றிற்கு மேலாக யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும், 40,000க்கு மேற்பட்ட துருப்புக்களுக்குமான, உணவு மற்றும் இராணுவ தளபாடங்களைக் கொண்டு செல்வதற்கான (Supply Route) ஓர் தரைவழிப்பாதையும் தேவை.

இதுவரை யாழ் குடாநாட்டிற்கான இராணுவ போக்குவரத்து என்பது கடல் மார்க்கமாகவோ அன்றி வான் மார்க்கமாகவோ தான் நடைபெற்று வருகின்றது. இது மிகவும் செலவான வழிமுறையாகும். எனவேதான் ஓர் தரைவழிப் பாதையொன்றை திறக்கும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இத்தரைவழிப் பாதையை திறக்க முனைந்த ஆரம்பத்தில் வவுனியாவில் தாண்டிக்குளத்திலும், கிளிநொச்சியில் டிப்போச்சந்தியிலும் இராணுவம் நிலை கொண்டிருந்தது. 1997ம்ஆண்டு மே மாதம் 13ம் திகதி இராணுவம் தாண்டிக்குளத்தில் இருந்து தனது தாக்குதலை ஆரம்பித்தது. ஓமந்தை வரைமிகவேகமாக முன்னேறிய இராணுவம் அதன் பின்னர் ஒவ்வொரு அங்குலமாகவே முன்னேற முடிந்தது.

இராணுவம் வீதியைத்திறந்தால் தமக்கு பலத்த பின்னடைவு ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்ட புலிகள் மிகப்பாரிய எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டார்கள். தாண்டிக்குளம், கனகராஜன்குளம், கிளிநொச்சி போன்ற இடங்களில் புலிகள் மேற்கொண்ட ஊடறுத்துத்தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகளிலும் ஆயிரக்கணக்கான போராளிகள் மடிந்தார்கள்.

யாழ்ப்பாணத்தை இராணுவத்திடம் இழந்த புலிகள் மக்களை வன்னியில் தம்முடன் குடியேறும்படி வேண்டினர். வன்னியும் இழக்கப்பட்டால், மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை போய்விடும் என்பதையுணர்ந்த புலிகள், இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து யாழ் வீதியைக் காக்க என்ன விலை கொடுக்கவும் தயாராக இருந்தனர்.

இதனாலேயே தமது முழுப்பலத்தையும் திரட்டி இராணுவத்தினரை கனகராஜன் குளத்தில் இருந்து முன்னேறாமல் தடை செய்தனர்.

ஆனால் என்ன விலை கொடுத்தாவது இராணுவம் முன்னேறும் என்பதை உணர்ந்த புலிகள், இராணுவத்தினருக்கு பாரிய இழப்பொன்றை ஏற்படுத்துவதன் மூலமே, அவர்களின் முன்னேற்றத்தை தடை செய்யலாம் என்று கருதினர். இதன்விளைவாகத்தான் கிளிநொச்சியில் பாரிய தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 1500க்கு மேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்டதுடன், இன்னும் ஆயிரக்கணக்கில் காயமடைந்தனர். இத்தாக்குதலில் புலிகள் தரப்பிலும் 700க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 1000க்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர்.

புலிகள் தரப்பில் இழப்புகள் அதிகமாக இருந்த பொழுதும் கூட அவர்களது நோக்கத்தைப் பொறுத்தவரையில் இது ஓர் வெற்றிகரமான தாக்குதலே. இத்தாக்குதலுக்காக புலிகள் மாங்குளம் உட்பட பல இடங்களில் இருந்தும் தமது போராளிகளை கிளிநொச்சியில் குவித்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, இலங்கை இராணுவம் மாங்குளத்தைக் கைப்பற்றியதுடன் முன்னரங்க நிலைகளிலிருந்து படையினருடன் சண்டையிட்ட 25சிறுவர்களும் சரணடைந்தனர்.

இதன்பின்னர் நவம்பர் 27ம் திகதிய மாவீரர் தின உரையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என பிரபாகரன் அறிவித்தார். இதே சமயம் இராணுவத்திலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜெயசிக்குறுவுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் பலகல்ல நியமிக்கப்பட்டார். அதன்பின் இராணுவ தரப்பு யுத்த தந்திரங்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மாங்குளத்தில் இருந்து முன்னேறுவது கடினம் என்பதைப் புரிந்து கொண்ட இராணுவத்தினர், மாங்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களில் இருந்து முன்னேறி ஒட்டி சுட்டானை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

புலிகளின் தரப்பில் எந்த எதிர்ப்புமில்லாமல், ஒரு இராணுவமும் கொல்லப்பட்டாமலேயே இது சாத்தியமாகியுள்ளது.

புலிகள் தரப்பில் இராணுவத்தின் இப்பகுதி முன்னேற்றத்தை தடுக்கும் விதத்தில் அங்கு புலிகள் போராளிகள் இல்லை என்பதனையே இது காட்டுகின்றது. குறைந்தபட்ச எதிர்ப்பு கூட அப்பகுதியில் இருக்கவில்லை என்பது புலிகளின் ஆள்பற்றாக்குறையையே தெளிவாகக் காட்டுகின்றது.

அது மாத்திரமல்லாமல், கிளிநொச்சித் தாக்குதலின் பின், மட்டக்களப்பில் இருந்தும், வன்னிப் பாடசாலைகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் புலிப்படையணிகளுக்காக பலாத்காரமாக திரட்டப்பட்டுள்ளனர்.


மறுபக்கத்தில் ஜெயசிக்குறுவில் நான்கு டிவிசன் (ஏறத்தாழ 40,000 துருப்புக்கள்) ஈடுபடுத்தியுள்ள இராணுவம், யுத்தத்தை தொடர்ந்து நடாத்த வேண்டுமெனில் மேலதிகமாக இரண்டு டிவிசன் தேவையெனக்கூறுகின்றது. அவர்களுக்கும் ஆள்பற்றாக்குறை என்பதுடன் சிங்கள இளைஞர்களும் இராணுவத்தில் சேர மறுத்துவருகின்றார்கள். இதனால் வன்னியுத்த மென்பது ஓர் தேக்க நிலைக்கே போயுள்ளது.

அதேசமயம் மாங்குளத்தில் மாத்திரம் குவிக்கப்பட்டிருந்த புலிகள் இப்பொழுது ஒட்டிசுட்டான், கிளிநொச்சி எனப் பரந்து விரிந்து, இராணுவத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இதனால் புலிகளும் தமது இராணுவ தந்திரங்களை இனி மாற்ற வேண்டி ஏற்படலாம். ஒட்டிசுட்டானை இராணுவம் கைப்பற்றியதானது, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறுபட்ட கிராமங்களையும் சிறுநகரங்களையும் இராணுவத்தில் எறிகணைத்தாக்குதல் எல்லைகளுக்குள் கொண்டுவந்துள்ளது.

இதனால் புலிகள் தமது பல தளங்களை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். அத்துடன் நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், மாங்குளம், வவுனியா என்ற எல்லைகளைக்கொண்ட ஏறத்தாழ 186 ச.கிமீ பரப்பளவு பிரதேசம் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு மக்களை மீளக்குடியேற்றப்போவதாக இராணுவம் கூறியுள்ளது.

மொத்தத்தில் இரு பக்கமும் யுத்தத்தில் பலவீனமாக இருப்பதுடன், தமது யுத்த தந்திரங்களையும் மாற்றுவதிலேயே முனைப்பாக உள்ளார்கள். "ஜெயசிக்குறு" என்ற தாக்குதலுக்கு விடைகொடுத்திருக்கலாம். ஆனால் யுத்தத்தை தொடர்வதில் அக்கறையாகவே உள்ளார்கள்.

## நெஞ்சம் நெகிழ அஞ்சலி செய்கின்றோம்.



சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவரான வை.பி. டி. சில்வா அண்மையில் இயற்கை எய்தி விட்டார் என்பது கவலை தருவதாகும். 1952 முதல் பொது வாழ்விலும், அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தவரான இவர் இனங்களுக்கிடையில் சமத்துவமான உறவு மலர வேண்டுமென்பதற்காகக் குரல் கொடுத்து வந்தவராவார். சிறீலங்கா மக்கள் கட்சியின் முன்னாள் தலைவரான விஜயகுமாரணதுங்கவுடன் இணைந்து சமாதானத்திற்காக குரல்கொடுத்த வர்களில் குறிப்பிடத்தக்கவர். பொதுஜன முன்னணி அரசியல் பிரதி அமைச்சராகவும் பதவி வகித்தவர். இவரது இழப்புக்காக எமது அஞ்சலிகள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.